உ

# அருள் ஒளி



## நவராத்திரி சிறப்பு மலர்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

148

புரட்டாதி - ஐப்பசி 2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான
# நவராத்திரி கொலு 2020





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்

**கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்**

**புரட்டாதி – ஐப்பசி மாத மலர்**

**2020**

**வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை, இலங்கை.**

e.mail: thurkaiammantemple@gmil.com
face book: @tellidurga

பதிவு இல : ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019 - 3

# போதையற்ற நாடு

என்றுமில்லாதவாறு போதைப்பாவனை எம் சமூகத்தில் அதிகரித்துச் செல்கிறது. யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. பாடசாலை மாணவர், பல்கலைக்கழக மாணவர்கள் வாழ்விலும் போதைப்பழக்கம் அதிகரித்து வருகின்றது. என் செய்வோம்? என்று பலரும் ஏக்கப் பெருமூச்சு விடுகின்றார்கள், தணிவதாக இல்லை. குறிப்பாக வட புலத்தில் இச் சூழ்நிலை வேகமாக அதிகரித்து வருகின்றது. கட்டுப்படுத்த முடியவில்லை. கஞ்சா வியாபாரிகள் கைது செய்யப்படுவதாகப் பத்திரிகைகளில் காணலாம். ஆனால் கஞ்சாப் பிரச்சினை குறைந்தபாடில்லை. எதிர்காலச் சந்ததி என்னவாகப் போகிறது. அச்சமும், ஆபத்தும் நிறைந்த சூழலில் நாம் வாழ்கிறோம். புங்குடுதீவில் பூசகரைக் கொலை செய்தவர்கள் மதுபோதையில் இக் கொடுமையைச் செய்ததாக ஊடககங்கள் வெளிப்படுத்தியது. யார் தான் என் செய்வது?

ஆன்மிக சூழலுக்கு முக்கியத்துவம் கொடுத்து எம் சமூகத்தை காக்க வேண்டும். ஆன்மிகமும் அறமும் இல்லாத சமுதாயத்தை நாம் உற்பத்தி செய்யத் தொடங்கி விட்டோம். பள்ளித்தலங்களில் ஆன்மிக அறப் போதனைகள் சீராக மேற்கொள்ளப்படுவதில்லை. நவ நாகரிக சமூகம் உருவாகிவிட்டது. வீடுகளில் பெற்றோர் பிள்ளைகளோடு தர்ம சிந்தனைகளைப் பேசுவதில்லை. தாய், தந்தை ஓடித்திரிந்து உழைத்தால் மட்டும் போதாது. தம் பிள்ளைகளின் வாழ்வு பற்றிச் சிந்திக்க வேண்டும். மாணவப் பருவத்திலேயே மதுவுக்கு அடிமையாகும் சமுதாயத்தை கட்டுப்படுத்த தவறுவோமாயின் பின் பாரிய விளைவுகளை நாம் எதிர் நோக்க வேண்டி ஏற்படும். போதையற்ற கிராமங்கள் உருவானால்தான் போதையற்ற நாட்டை எதிர்பார்கலாம். அனைவரும் இவ்விடயத்தில் அதித அக்கறை செலுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவனின் நவதாண்டவங்களுக்குரிய கோலங்களும் தேவிவடிவங்களும்.

நவராத்திரியில் சிவவழிபாடும் அம்பிகை ஆராதனையும் சிறந்தவை. சிவன் ஆடிய தாண்டவக் கோலங்கள் நாம் அறிந்தவை. அவற்றுள் சிலவற்றை எம்பெருமான் ஆடிக்களித்த போது, தாண்டவத்துக்கேற்ற கோலங்களும், எம்பெருமாட்டியின் திரு அவதாரங்களும் நிகழ்ந்தன. ஆண்கள் ஆடுவது தாண்டவம், பெண்கள் ஆடுவது லாஸ்யம். தில்லையம்பலக் கூத்தபிரானே அணுவுள் அணுவாகவும், அண்டத்துக்குள் அண்டமாகவும் நின்று ஆடி, உலகத்தை இயக்கி வருகிறான். இறைவன் முப்பதாயிரம் கோடி நாட்டியங்களுக்கு மேலாக ஆடினான் என்பர். ஒவ்வொரு நாட்டியத்துக்கும் அங்க அசைவும், பாவமும் முத்திரைகளும் தனித்தனியானவை. அத்தகைய நடனத் திருக்கோலங்களில் ஒன்பது தாண்டவங்களையும், அப்போது இறைவன் வரைந்த கோலங்களையும், ஆவிர்பவித்த அம்பிகை உருவங்களையும் இங்கே தருகிறோம்.

### ஆனந்தத் தாண்டவம்

இடது காலைத் தூக்கி வலக்காலை ஊன்றி ஆடும்நிலை. இந்தத் தாண்டவம் ஆடும் போதே, இடதுகால் சுண்டுவிரலால் தரையில் கோலத்தை வரைந்தார். கோலத்தின் பெயர் ரிஷி மண்டலக் கோலம். இந்தக் கோலத்திலிருந்து ஆவிர்பவித்த அம்பிகையின் திருநாமம் சைலபுத்ரி.

நவராத்திரியின் முதல் நாள், மஞ்சள் கலந்த அரிசிமாவினால் இந்தக் கோலமிட்டு வணங்க வேண்டும். இரண்டு வயதுப்பெண் குழந்தையை, இந்த அம்பிகையாக எண்ணிப் பூசித்தால் ஆஸ்துமா, நீரிழிவு போன்ற நோய்கள் குணமாகும். (பூசித்தல் என்றால் காலில் நலங்கிட்டு, புத்தாடை அணிவித்து, வளையல், சீப்பு, கண்ணாடி ஆகியவை அளித்து, சாட்சாத் எம்பெருமாட்டியாகப் பூஜிப்பது, பால் பாயசம் நைவேத்தியம் செய்து அளிப்பது முதலியவை)

### சந்தியா தாண்டவம்

சந்தியா வேளையில் இறைவன் ஆடிய திருநடனம். இத் தாண்டவத்தின் மூலம் தாளவாத்தியங்களுக்கு ஒலி கொடுத்தார். தாண்டவ நிலையில் இடக்கால், இரண்டாம் விரலால் வரைந்த கோலம் இது. சப்த ஒலிக்கோலம் இதிலிருந்து கூஷ்மாண்டா என்ற தேவி ஆவிர்ப்பவித்தாள். மூன்று வயதுப் பெண்குழந்தையைப் பூஜிக்க வேண்டும். கடன்படாத வாழ்வு கிட்டும்: மனம் அமைதியுற்று விளங்கும், அஸ்திரப் பயிற்சிகளுக்கு ஏற்றபலன் கிடைக்கும்.

### திரிபுர தாண்டவம்

திரிபுரசங்கார காலத்தில் ஆடிய திருக்கோலம். வலக்கால் கட்டை விரலால் அஷ்ட வசுக்கோலம் வரைந்தார். குங்கும வண்ணத்தில் பிரம்மசாரிணி என்ற தேவி தோன்றினாள். குங்குமம் கலந்த அரிசிமாவுக் கோலமிட்டு, நான்கு வயதுக் குழந்தையைப் பூஜிக்க வேண்டும். வாயுத் தொல்லைகள், சந்திராஷ்டமக் காலத் தொல்லைகள் நீங்கும். தில்லையெம் பெருமானைச் சோமசுந்தரப் பெருமானாக எண்ணி வணங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஊர்த்துவ தாண்டவம்

இடக்காலும் வலக்காலும் நேர்கோட்டில் அமைந்த தாண்டவ நிலை. அம்பிகை அப்படி ஆட முடியாமல் வெட்கித் தலை குனிந்த நிலை. திருவாலங்காட்டு நடனத்தில் காளி தோற்ற தாண்டவம்.

வலக்கால் ஐந்து விரல்களால் வரைந்த திருக்கோலத்தின் பெயர் பிரணவ ஒலிக்கோலம். இந்தக் கோலத்திலிருந்து தோன்றிய தேவி சந்திரகாந்தா. வெள்ளைநிறத் திருமேனி. ஐந்து வயதுப் பெண் குழந்தையைப் பூஜிக்க வேண்டும். நவராத்திரி சமயத்தில் இப்படிப் பூஜை செய்தால் தடைப்பட்ட திருமணங்கள் விரைவில் நடைபெறும்.

### புஜங்க தாண்டவம்

பாற்கடல் கடைந்த சமயம், நஞ்சை உண்டபோது தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் எதிரில் ஆடிய தாண்டவம் இது. சீறிப் படம் எடுத்து ஆடும் அரவத்தைப் போன்ற நடனநிலை. அப்போது கைகளாலும் சடைகளாலும் வரைந்த கோலம் புஜங்க தாண்டவக் கோலம். அந்தக் கோலத்தில் ஆவிர்பவித்த தேவி ஸ்கந்தமாதா. இந்தத் தேவியின் தரிசனம் பெற்ற, தேவர்கள் சாப விமோசனம் பெற்றனராம். எம்பொருமாட்டி நீலநிறத் திருமேனியில் ஒளிர்பவள். வலக்கையில் சஞ்சீவி இலைக் கொத்தைத் தாங்கிய கோலம். அரிசி மாவுக் கோலம் வரைந்து, ஆறு வயதுக் குமரியை அலங்கரித்துப் பூஜித்தால், உணவுக் கலப்படத்தால் உண்டாகும் நோய்கள் விலகும், நஞ்சும் நமனாக அமையாது.

### முனி தாண்டவம்

பதஞ்சலி முனிவர், தம் கால்களால் மத்தளம் வாசிக்க - அவருக்காக இறைவன் ஆடிய திருநடனம் இது. அப்போது இறைவன் திருநயன ஒளிவரைந்த கோலம் முனி தாண்டவக் கோலம். அந்தக் கோலத்திலிருந்து பால் வெள்ளை திருமேனியாய் அம்பிகை கார்த்தியாயினி தோன்றினாள். சதங்கை கொஞ்சும் எழில் உருவம். ஏழு வயதுக் குமரிப்பெண்ணை, கார்த்தியாயினியாக அலங்கரித்துப் பூஜித்தால் நேத்திர ரோகங்கள் குணமாகும். கண்ணொளி சிறக்கும்.

### பூதத் தாண்டவம்

கஜாசுரனைச் சம்ஹரித்த நிலையில் ஆடிய தாண்டவம் இது. பிரம்மா நட்டுவாங்கம் செய்ய, வாலை உத்தமி தேவி மத்தளம் வாசிக்க, நந்திதேவர் கோலவாத்தியம் முழங்க, கணபதி ஜால்ராபோட, முருகன் பூச்சொரிய இறைவன் ஆடியதாண்டவம் இது. இறைவன் அதிர்ந்து ஆடிய நடனத்தினால் விளைந்தது பூதத் தாண்டவக் கோலம். இதிலிருந்து ஆர்ப்பவித்த அம்பிகை காலராத்ரீ. கருநிறத்திருமேனி. அரிசிமாவில் கோலமிட்டு, எட்டுவயதுப் பெண்ணை அலங்கரித்துப் பூசித்தால் இளமை மாறாத இன்பவாழ்வு அமையும்.

### சுதா தாண்டவம்

தண்ட காரண்ய முனிவர்களின் வேண்டு கோளுக்காக இறைவன் ஆடிய தாண்டவம் இது. வரைந்த கோலம் சுதா தாண்டவக் கோலம் இந்தத் தாண்டவக் கோலத்திலிருந்து தோன்றிய பிராட்டி மகாகெளரி. பச்சைநிறத் திருமேனியள். அரிசிமாவில் இந்தக் கோலத்தை வரைந்து, எட்டு வயதுப் பெண்ணை அம்பிகையாக, எழிலுருவினளாக அலங்கரித்து வணங்கினால் வியாபார விருத்தி ஏற்படும்: விபத்துக்கள் உண்டாகா: எண்ணங்கள் செயல் உருவம் பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவரசங்களையும் எடுத்துக் காட்டும் எழில் தாண்டவத் திருக்கோலம் இது. இந்தத் தாண்டவத்தில் வரைந்த கோலம் சிருங்காரத் தாண்டவக் கோலம். ஆவிர்பவித்த அம்பிகை ஸித்திதாத்ரீ. சிவந்த திருமேனிப்பாங்கு, கரும்பும் அபயஹஸ்தமும் அண்டியவர்களுக்கு வாழ்வில் இனிமையையும் தைரியத்தையும் அளிக்கவல்லவை. அரிசிமாவில் கோலமிட்டு, பத்துவயதுக் குமரிப்பெண்ணை, அம்பிகையாக உருவகித்து வழிபட்டால் எண்ணங்கள் ஈடேறும். கலைகளில் மேதையாகலாம், வாக்குகள் பலிதமாகும்.

## நவராத்திரி கவிதைகள்

வல்லமை தந்திடும் மலைமகளே

வாழ்த்திப் போற்றி வலுவடைவோம்

நல்ல பொருள் தரும் அலைமகளே

நாமம் சொல்லி வாழ்த்திடுவோம்

கல்வி தந்திடும் கலை மகளே

காலமெல்லாம் போற்றிடுவோம்

எல்லாம் பெற்றே இன்ப முற

என்றும் பணிவோம் இவர் பதமே

திங்களைச் சூடியோன் தேவி போற்றி

தேவி பார்வதித் தாயே போற்றி

சங்கு கொண்டவன் துணையே போற்றி

செல்வமெல்லாம் தரும் திருவே போற்றி

தங்கும் கல்விக் கரசியே போற்றி

தாயே வாணியுன் தாளே போற்றி

மங்களம் தந்திட வருவீர் போற்றி

முப் பெரும் தேவிகள் போற்றி! போற்றி!!

– செண்பக ஜெகதீசன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்சகோதரி யதீஸ்வரி அம்மையார்

பூ. செல்வதியம்மா B.A (Hons), துர்க்காபுரம் மகளிர் இல்லம்

'நோய், முதுமை, சாக்காடு என்பதினைக் கண்டு அஞ்சியவர்கள் அதனை வெல்வதற்க்காக கையாண்ட உத்தியே துறவு என்பதாகும். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக இந்து மதத்திலிருந்து துறவினை நாடிய புத்தரை உதாரணமாக காட்டலாம்.' எனக் கூறுகின்ற அருட்சகோதரி யதீஸ்வரி அம்மையார் அவர்களைப்பற்றியும் அவரது பணிகளைப்பற்றியும் காணின்,

ஈழத்திலே மத்திய மாகாணங்களில் ஒன்றாகிய கண்டி மாவட்டத்திலே 'பன்வில' எனும் எஸ்ரேட் பிரதேசத்திலே மலையப்பர் கதிர்வேல் அவர்களுக்கும் உலகாம்பாளுக்கும் மகளாக 1944ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் பதினாறாம் திகதி(1944.10.16) பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் 'அன்னபூரணி' என்பதாகும். இவருடன் உடன் பிறந்த சகோதரர்கள் முறையே 'பார்வதி, நாராயணசுவாமி, அமுதம், அருணாசலம்' என்பவர்களாவார். இவருடைய தகப்பனார் எஸ்ரேட்டில் தலைமைக் கணக்குப் பிள்ளையாகப் பணி புரிந்தவர். அம்மையார் அவர்கள் தனது கல்வியினை மத்திய மாகாணத்தில் மேற்கொண்டிருந்தார். தனது ஆரம்பக் கல்வியினை அதாவது 1-8ஆம் வகுப்பு வரை 'வத்தேகம' கல்லூரியிலும் இடைநிலை மற்றும் கா.பொ.த உயர்தரக் கல்வியினை 'பன்வில விக்னேஸ்வராக் கல்லூரியிலும்' மேற் கொண்டார். இவர் தனது உயர் தரத்தினை கலைத்துறையிலே மேற் கொண்டவராவார். இவர் உயர் தரத்திலே சிறந்த பெறுபேறுடன் தோற்றியிருந்தாலும், இவரது நாட்டம் ஆன்மிக நிலையிலேயே தங்கியது. அதன் காரணமாக இவர் தனது ஆன்மிகப் பயணத்தினை ஆரம்பித்தார்.

பயணத்தின் முதற் கட்டமாக இவர் வட மாகாணத்தில் கிளிநொச்சியிலே மகாதேவா ஆச்சிரமத்திற்கு வந்தடைந்தார். 1983ஆம் ஆண்டு தை மாதம் 06 ஆம் திகதி மகாதேவா ஆச்சிரமத்தில் தனது பணியினைத் தொடங்கிய அம்மையார் அவர்கள் அங்கிருந்த குருநாத சுவாமியிடம் உபதேசத்தினைப் பெற்று ஐந்து வருடங்கள் ஆன்மிகக் கல்வியினைக் கற்றுத் தேர்ந்தார். இதன் பயனாக இவரது 28ஆவது வயதிலே அருட்சகோதரி எனும் தீட்சாநாமம் பெற்று துறவற நிலையினை எய்தினார். தனது பணியினை மகாதேவா ஆச்சிரமத்தில் செம்மையாக ஆற்றிய யதீஸ்வரி அம்மையார் அவர்கள் கலாநிதி. சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அன்பிற்குப் பாத்திரமாகி தனது 42ஆவது வயதிலே அதாவது 1986ஆம் ஆண்டு சித்திரை மாதம் துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கு அன்னையின் அழைப்பினால் வந்த சேர்ந்தார். தனது பணிகளை பல தரப்பட்ட கோணத்தில் விஸ்தரித்துப் பணியாற்றிக் கொண்டிருந்த கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் விருப்பமாகவும், செல்லமாகவும் மரியாதையாகவும் 'சிஸ்ரர் அம்மா' என முதன் முதலாக அழைக்கப்பட்டார். அன்றிலிருந்து இவரது அனைத்துப் பெயர்களும் மறைந்து போயின. அனைவருக்கும் சிஸ்ரர் அம்மா என்றால் மட்டுமே இவரைத் தெரியும் நிலை ஏற்பட்டது. இவ் அன்புப் பிணைப்பின் காரணமாக துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கும், துர்க்காபுரம் மகளிர் இல்லத்திற்கும் அளப்பரிய பணியாற்றியவர். இவரது பணிகளை நாம் பட்டியலிட்டு நோக்கத்தக்க வகையில் இவர் ஆற்றியிருக்கும் சேவை அமைவு பெற்றுள்ளது. அதனைச் சுருக்கமாகக் காணின்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மகளிர் இல்லப் பணி

இவர் 1986ஆம் ஆண்டு சித்திரை மாதம் இல்லப்பணியினை ஏற்றுக் கொண்டு கடந்த ஒருவருடங்கள் வரை ஆற்றி வந்தவராவார். கிட்டத்தட்ட 34 வருடங்கள் தனது சேவையினை வழங்கியுள்ளார். "பிரார்த்தனை, வழிபாடு, கல்வி, சுயஆக்கங்கள் (ஆக்கவேலைகள்), தையல், சமையல்." என தனது அனைத்து நிலைகளிலும் தன்னை முன்னிலைப்படுத்தி மாணவர்களைச் செயற்பட வைத்தவர்.

2. ஆலயப்பணி

தேவாரம் பாடுதல்

தேவாரம் பாடுதலை இவர் காலை, மதியம், சாயங்காலம் என மூன்று வேளைகளிலும் ஆற்றத் தவறவில்லை.

திருமுறை ஓதல், புராணம் படனம்

திருமுறை மடத்திலே திருமுறை ஓதுவதும் ஆலயத்திலே கந்தபுராணம், பெரிய புராணம் என்பவை ஒழுங்கு முறையிலே மாறி மாறி ஓதப்படுவதும் வழமை. இவை இரண்டிலும் அருட்சகோதரி யதீஸ்வரி அம்மையார் அவர்கள் தவறாமல் கலந்து கொண்டவர்.

மாலை கட்டுதல், கோலம் போடுதல்

'இறைவோர்கோர் பச்சிலை' என்கின்றது நாலடியார் யதீஸ்வரி அம்மையார் அவர்கள் இதனைக் கடைப்பிடிக்கத் தவறவில்லை. அதிகாலை 3.00 மணிக்கு எழுந்து பூப்பறிக்கும் இவர், அதனை மாலையாகத் தொடுப்பதிலும் மிகுந்த ஆர்வம் உடையவர். செவ்வரத்தம் பூவிலே அழகாக மாலைதொடுப்பதில் கைதேர்ந்தவர். அதனை மகளிர் இல்லப்பிள்ளைகளுக்கும் கற்பித்தார். 'ரங்கோலி, புள்ளிக்கோலம், தானியக்கோலம், பூக்கோலம் என அத்தனை கோலங்களையும் சிறப்பாக போடுவதில் கைதேர்ந்தவராவார். இவர் தனது புள்ளிக்கோலத்தினை 'மஞ்சுளா, நளாயினி, தவனேஸ்வரி போன்றோருக்கும் கற்பித்தார். அவை 10அடி, 15அடி என நீண்டதோர் புள்ளிகோலமாக அமையும். அவற்றை சுலபமாகவும் எளிதாகவும் அரை மணித்தியாலங்களுக்குள் போடுவதற்குப் பழக்கப்படுத்தியவர்.

3. எழுத்துருவாக்கப் பணி

தனது எழுத்துருவாக்கங்களை பெரும்பாலும் புனைப்பெயர்களிலேயே ஆக்கியுள்ளார். சிறுவர்கதைகள், நாடகங்கள், பாடல்கள், சமய ரீதியான துணுக்குகள் என்பவற்றை, "பூரணி, நிவேதிதா, மலைமகள்" எனும் புனைப் பெயர்களுடன் "வீரகேசரி, மங்கையர் மலர், சிந்தாமணி" என்பவற்றில் வலம் வந்தார்.

**நாடகம்**

இவர் எண்ணிறைந்த நாடகங்களை மகளிர் இல்லப் பிள்ளைகளுக்கு பழக்கி மேடையேற்றியவர் ஆவார். முயலார் முயல்கின்றார், விறகு சுமந்த கதை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசர், அப்பூதியாடிகள், மண்சுமந்தகதை, கூன்பாண்டியன், மங்கையர்கரசியார், ஞானசம்பந்தர், ஆலமரமும் கிளியும், அன்பிற்கும்உண்டோ அடைக்கும்தாள், பட்டினத்தடிகள் என ஏராளமான நாடகங்ளை தானே உருவாக்கி மேடையேற்றியவர்.

வானொலி

'இலங்கை வானொலி தமிழ் சேவையில் - தமிழ் மாலை, தமிழ் பாமாலை' போன்ற நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டவர்.

புத்தகமும் சிறுகதையும்

1) மானிடம் வென்றது.

(மாணவர்களுக்கான நன்நெறிக்கதைகள்), வெளியீடு துர்க்காதேவி தேவஸ்தானம், 2011.

2) ஆடிப்பாடுவோம்

தெல்லிப்பழை கலை இலக்கிய கழகத்தினால் வெளியிடப்பட்டது, 2015

4. நூலகப்பணி

இவர் சில காலத்திற்கு சிவத்தமிழ்ச்செல்வி ஆய்வு நூலகத்தினை பொறுப்பேற்று நடாத்தினார்.(2000 – 2014)

5. தையற்பணி

6. யாத்திரைப் பயணம்

என இன்னும் பட்டியல் இடப்படாத ஏராளமான பணிகளைத் தொண்டுகளாக ஆற்றியுள்ளார். இது பற்றி இவர் குறிப்பிடும்போது பல வாசகங்களை முன் வைப்பது வழக்கம்.

'மக்கள் சேவையே மகேசன் சேவை'

'ஏழைகள் சிரிப்பில் இறைவனைக் காணலாம்.'

அப்பரது கூற்றாகிய 'என் கடன் பணி செய்து கிடப்பதே'

என்பதனைத் தனது மனத்தின் வலியுறுத்தலாகவும் வைராக்கியமாகவும் கொண்டவராவார். அது பற்றி அவரிடம் நேரடியாக வினாவிய போது அவர் கூறிய வரிகள் 'துறவு' என்பது தொண்டுக்காகப் போடப்பட்ட ஆடை. அத் தொண்டினை மக்களுக்காக ஆற்றும் போது மகேசனே ஆனந்தம் கொள்கிறான். எனவே குழந்தைகளுக்கும் பெண்களுக்கும், வயோதிபருக்கும் உதவும் தொண்டினை நான் பெரிதும் விரும்புகின்றேன். ஆதலால் அதனில் ஈடுபடவும் செய்கிறேன் என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'காசி வாரணாசி, ரிசிகேசம், ஆக்ரா' எனவும் இந்தியக் கோயில்கள் பலதையும் வலம் வந்தவராவார். 2016ஆம் ஆண்டளவிலும் இந்திய ஆறுபடை வீடுகளைத் தரிசித்தவர். துர்க்காதேவி அறநெறிப் பாடசாலையிலும் கற்பித்தவர். இன்று முதுமை எனும் காரணத்தினால் சிவபூமி முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் இவர்

'ஆளுமைக்கு செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களையும்,
சிந்தனைக்கு செஞ்சொற் செல்வர். கலாநிதி. ஆறு. திருமுருகன் ஐயர்
அவர்களையும் எடுத்துக் காட்டுவது வழக்கம். அவர்களது சேவைகளையும் அரும் பணிகளையும் மனிதத்துவத்தையும் இன்றும் மதிப்பவர். இவர் தனது துறவு வாழ்வினைத் தொண்டாக வாழ்ந்து வந்தாகக் குறிப்பிடும் போது இளமை இருக்கும் போதே இறை தொண்டினை ஆற்றி விடுங்கள். அல்லது போனால் முதுமையில் வருத்தப்படுவீர்கள் என்று கூறுகின்றார். எமது மதத்திலே துறவு வாழ்விற்கெனத் தம்மை அர்ப்பணித்தவர்கள் சுட்டிக் காட்டத்தக்க சிலரே. அதிலும் பெண்கள் மிகவும் அரிது. வருங்காலங்களில் பெண் துறவிகள் அற்றுப் போக வாய்ப்பிருக்கிறது. இருப்பினும் சேவையினைத் துறவறம் பூணாது கூட செய்யலாம், ஆற்றலாம். என்பது துறவற எழுத்தாளரான அருட்சகோதரி யதீஸ்வரி அம்மையார் அவர்களினால் எமக்குக் கிடைக்கும் செய்தியும் பாடமும் ஆகும்.

**நாமகள் துதி**

பழுதகன்ற நால்வகைச்சொல் மலரெடுத்துப்

பத்திபடப் பரப்பித் திக்கு

முழுதகன்று மணந்துசுவை யொழுகியணி

பெறமுக்கண் மூர்த்தி தாளில்

தொழுதகன்ற வன்பெனுநார் தொடுத்தலங்கல்

சூட்டவரிச் சுரும்புந் தேனுங்

கொழுதகன்ற வெண்டோட்டு முண்டகத்தா

ளடிமுடிமேற் கொண்டு வாழ்வாம்.

குற்றநீங்கிய பெயர் வினை இடை உரி என்னும் நான்கு வகையையுடைய சொற்களாகிய மலர்களை எடுத்து நிரல் பெற வைத்து எல்லாத் திக்குகளினுஞ் சென்று கமழ்ந்து சுவை ஒழுகப்பெற்று அழகு பெற பெரிய அன்பாகிய நாரினால் பாமாலையாகச் செய்து மூன்று கண்களையுடைய இறைவனுடைய திருவடிகளில் வணங்கி அணிவதற்கு கீற்றுக்களையுடைய ஆண்வண்டும் பெண்வண்டும் குடைதலினால் விரிந்த வெண்மையான இதழ்களையுடைய தாமரைப்பூவை இருக்கையாகவுடைய நாமகளின் திருவடிகளை சென்னியிற் சூடிவாழ்வாம்.

திருவிளையாடல் புராணம் - கடவுள் வாழ்த்து :16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானமழை நானுனக்கு வளரும் பயிர் நீயெனக்கு

வானமழை நானுனக்கு வளரும் பயிர் நீயெனக்கு
தேனமுது நானுனக்கு தீஞ்சுவையாய் நீயெனக்கு
ஊனமுறும் போதிலென்றன் ஊன்று கோலு மாபவளே!
ஞானமிகு வாழ்கனவே! நல்ல மகவே! கண்ணம்மா!

நீட்டுகரம் நானுனக்கு நிறைபொருளாய் நீயெனக்கு:
தேட்டமடி நானுனக்கு திரவியமாய் நீயெனக்கு:
காட்டுமிடந் தோறு(ம்) நின்றன் கண்வழியே காண்பனடி!
பாட்டின் சுவையே! பளிங்கே! பழகுதமிழே! கண்ணம்மா!

வெள்ளியடி நானுனக்கு, வெண்மதியாய் நீயெனக்கு:
பள்ளியடி நானுனக்கு, பாடமடி நீயெனுக்கு:
கள்ளமறு நகையிலென்றன் கங்குல் கலைபவளே!
வெள்ளைமனத்தோய்! வெகுளி! வேதப்பொருளே! கண்ணம்மா!

பாய்மரமாய் நீயெனக்கு, படகதுவாய் நானுனக்கு:
சேய்வரமாய் நீயெனக்கு, தாய்மடியாய் நானுனக்கு:
நோயுணரும் போதிலென்றன் நோய்க்குமருந் தாபவளே!
தாயுமெனக் கானவளே! தாங்கு பலமே! கண்ணம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏர்முனை

ஏர்முனைக்கு நேரிங்கே எதுவுமே இல்லே!
என்றும்நம்ம வாழ்விலே பஞ்சமே இல்லே! - (ஏர்முனை)

பூமியிலே மாரியெல்லாம் சூரியனாலே - பயிர்
பூப்பதுவும் காய்ப்பதுவும் மாரி யினாலே - நாம்
சேமமுற நாள்முழுதும் உழைப்பத னாலே - இந்தத்
தேசமெல்லாம் செழித்திடுது நமம் கையாலே - (ஏர்முனை)

நெத்தி வேர்வை சிந்தினோமே முத்துமுத்தாக - அது
நெல்மணியாய் விளைஞ்சிருக்குக் கொத்துக்கொத்தாக
பக்குவமாய் அறுத்துஅதைக் கட்டுக்கட்டாக - அடிச்சுப்
பதருநீக்கிக் குவிச்சு வைப்போம் முட்டுமுட்டாக! - (ஏர்முனை)

வளர்ந்துவிட்ட பருவப்பெண் போல்உனக்கு வெட்கமா? - தலை
வளைஞ்சு சும்மா பாக்கிறியே தரையின்பக்கமா - இது
வளர்த்துவிட்ட தாய்க்குத் தரும்ஆசை முத்தமா? - என்
மனைக்கு வரக்காத் திருக்கும் நீஎன் சொத்தம்மா - (ஏர்முனை)

- கவிஞர் மருதகாசி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் மீது கொண்ட நீலம்

கடல் மீது கொண்ட நீலம்
தனக்கே சொந்தமென
கடல் கொந்தளித்தால்
வானம் தான் கோபம் கொள்ளாதோ?

வான்மீது கொண்ட மேகம்
தனக்கே சொந்தமென
வான் வழக்கிழுத்தால்
கடல் தான் கோபம் கொள்ளாதோ?

உடல் மீது கொண்ட ஆன்மா
தனக்கே சொந்தமென
உடல் கூக்குரலிட்டால்
இயற்கை தான் கோபம் கொள்ளாதோ?

உன் மீது கொண்ட காற்று
தனக்கே சொந்தமென
உன் உள்ளமுரைத்தால்
பஞ்ச பூதங்கள் தான் கோபம் கொள்ளாதோ?

எதுவும் சொந்தமில்லா உலகில்
எல்லாம் சொந்தமென மானிடன்
மாயையை மெய்யாக்கி வாழ்வது
மட்டும் ஏனோ?

- கவிஞர் இனியவன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமயிகள் என்போர் யாவர்?

குமாரசாமி சோமசுந்தரம்

ஒரு நல்ல சைவ சமயியிடம் காணக்கூடிய இலட்சணங்கள் யாவை? இது பலரின் மனத்தையும் உறுத்துகின்ற ஒரு வினா. இதற்கு முழுமையான விடையைக் குறுகிய நேரத்திற்குள் தருவது இயலாத காரியம். ஒரு சில இலட்சணங்களையாதல் இங்கு பார்ப்போம். சிவபெருமானை முழுமுதற் கடவுளாக ஏற்று அவரை வழிபாடு செய்பவர்கள், அவரினால் அருளப் பெற்ற வேத ஆகமங்கள் மற்றும் தோத்திர சாத்திர நூல்கள் என்பவற்றை ஓதி உணர்ந்து வாழ்க்கையில் கைக்கொள்பவர்கள் சிவசின்னங்களை தரிப்பவர்கள், திருவைந்தெழுந்து ஓதுபவர்கள். அன்பு நெறியில் நிற்பவர்கள் சைவர்கள் ஆவர்.

**சைவப் பண்புகள்**

சைவன் சமநோக்குக் கொண்டவன். எந்த உயிரையும், எந்தப் பொருளையும் பேராசை கொண்டு நச்சாமலும், பகைமைபூண்டு வெறுக்காமலும் இருப்பவன் எவனோ அவன் சமய நோக்குள்ளவன். இன்பத்தை கண்டு துள்ளிக் குதிக்காமலும்; துன்பத்தைக் கண்டு துவண்டு வீழ்ந்துவிடாமலும் இருத்தல் சமநோக்கின் இலட்சணம். நன்மை, தீமை இரண்டையும் சமமாக நோக்குபவனே மகாஞானி.

சத்தியம், அகிம்சை- இவ்விரண்டையும் சைவசமயி விரதமாகக் கொள்வான். கருணையே சைவசமயியின் வடிவம். அவனிடம் அன்பு, இரக்கம், தயை என்னும் குணங்கள் குடிகொண்டிருக்கும். எந்தப் பிராணியிடத்தும், எவரிடத்தும் பகைமையோ, வெறுப்புணர்வோ, பொறாமையோ, கோபமோ இருக்கமாட்டாது. சம நோக்கு உள்ளவனாய் எல்லோருக்கும் தமர், பிறர் பேதமின்றி, உதவி செய்வதையே உழைப்பாக்கிக் கொண்டிருப்பான். நீதி, நடுநிலைமை, நேர்மை என்பன சைவ சமயியின் அணிகலன்கள்.

சைவ சமயி ஆசைகளுக்கு இடங்கொடுக்கமாட்டான். சிற்றின்பங்களினால் கவரப்படமாட்டான். காமத்திற்கு என்றுமே அடி பணியமாட்டான். ஒழுக்கத்தை உயிரிலும் மேலாக ஓம்பும் பண்பு, ஒரு சைவ சமயியின் மேலான இலட்சணமாகும். விளையாட்டிற்குத்தன்னிலும் பொய் பேசாமை: மாதா, பிதா, குரு, தெய்வம், பெரியோர்களை மதித்து மரியாதை செய்தல், மனம், மொழி, மெய்த்தூய்மையுடைமை, உற்றநோய் நோன்றல், உயிர்க்குறு கண் செய்யாமை என்பன சைவ சமயியின் விசேட இலட்சணங்கள் ஆகும். பகுத்துண்டு பல்லுயிரோம்புதல் என்பதை வாழ்க்கை கடமையாகவே கொள்பவன் சைவன்.

கொல்லா அறம், சைவ சமயியின் தலையாய அறம். எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலில், அவன் சைவன். கொல்லாமை, புலால் உண்ணாமை ஆகிய இரண்டையும் விரதமாக காப்பவன் சைவன். மது மற்றும் போதைப் பொருட்களையும் பாவித்துக்கொண்டு, புலால் உணவையும் உண்டு கொண்டு, திருடுதல் மற்றும் பல்வேறு ஊழல்களிலும் ஈடுபட்டுக் கொண்டு அதே வேளை, சைவன் என்று தம்மை வெளிப்படுத்திக் கொள்ளல் என்பது தன்னையும் ஏமாற்றிப் பிறரையும் ஏமாற்றுங் கொடுஞ்செயலாகும். இதை விட மகாபாவ காரியம் வேறெதுவும் இருக்கமுடியாது. சைவம் என்பது ஒழுக்கத்திலேயே தங்கியுள்ளது என்பதை நினைவிற் கொள்ளுதல் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவன் புலனடக்கத்தோடு வாழ்பவன். புலன்களுக்கு அவன் எசமானன். புலன்கள் அவனுக்கு எசமானனாக இருக்க அவன் அனுமதிக்கமாட்டான். அவன் எல்லோர்க்கும் இனியன், வாழ்க்கை தூயதாய் அமைந்திருக்கும். அவன் உட்கொள்ளும் உணவு அளவாக இருக்கும். அவன் வாழ்வதற்காக உண்பவனே ஒழிய உண்பதற்காக வாழ்வதில்லை. அவன் மனத்தை அலட்டிக்கொள்வதில்லை. அதனால் அவன் என்றும் மன அமைதியோடிருப்பான்.

சைவன், இயம, நியமங்களைப் பேணுவதில் கண்ணும் கருத்துமாயிருப்பான். அஹிம்சை, சத்தியம், கள்ளாமை, நாணம், வெளவாமை, கடவுள் நம்பிக்கை, பிரமச்சரியம், மௌனம், உறுதி, சகிப்பு, அஞ்சாமை என்பன இயமம் ஆகும். அகப்புறத் தூய்மை, ஜெபம், தவம், அக்கினிகாரியம், சிரத்தை, விருந்தினரைப் பேணல், கடவுள் வழிபாடு, தலயாத்திரை, பரோபகாரம், மனத்திருப்தி, ஆசிரியருக்குப் பணிவிடை செய்தல் என்பன நியமம் ஆகும். சைவநெறியில் நிற்போர் இந்த இயம, நியமங்களை அனுசரித்து ஒழுகுவர்.

ஒரு சிறந்த சமயி, சமம், தமம், தைரியம், தானம், வீரம், சத்தியம் என்பவற்றை மேற்கொள்வர். கடவுளிடம் கருத்தைச் செலுத்தல் சமம். புலன்களை அடக்குதல் தமம். துன்பங்களை பொறுத்தல் திதிசைஷ் நாவை அடக்குதல் தைரியம்: எவரிடமும் பகை கொள்ளாமலும், பிறர் தன்னைக் கண்டு அஞ்சச் செய்யாமலும் இருப்பது தானம். ஆசையை விட்டுவிடுதல் தவம். ஆசாபாசங்களை வெல்லுதல் வீரம். பரம் பொருளைக்கண்டு மகிழ்வது சத்தியம். சைவசமயி, இத்தகைய சைவ இலட்சணங்களை உடையவனாய் இருத்தல் இன்றியமையாததாகும்.

## சமய ஆசார, ஒழுக்கம்

சைவ ஆசார அனுட்டானங்கள் என்பன சைவ சமய சாதனைகள் ஆகும். அவை நடைமுறையில் அனுட்டிக்கப்பட வேண்டியன. ஆனால் தற்காலத்தில் சைவமக்கள் ஆசார, அனுட்டனங்களுக்கு அத்துணை முக்கியத்துவம் கொடுப்பதாகத் தெரியவில்லை. அவையெல்லாம் இக்காலத்து நவ நாகரிகத்துக்கு ஒவ்வாதவை என்று எண்ணுகின்றார்கள் போலும், நம் முன்னோர்கள் எதையும் காரணமில்லாமல் செய்யமாட்டார்கள். பயனற்றவற்றில் ஈடுபட்டிருக்கமாட்டார்கள். அவர்கள் சமய ஆசாரங்கள், ஒழுக்கங்களில் மிக இறுக்கமாக இருந்தமையினால் தான், விஞ்ஞான வசதிகள், மருத்துவ வசதிகள், மிகக்குறைவாக இருந்த பழைய காலங்களில் உடல் ஆரோக்கியத்துடனும், மன அமைதியுடனும் எம்மைக்காட்டிலும், சிறப்பாக வாழக்கூடியதாக இருந்தது. மனிதர்கள் சமூகத்தில் நல்லுறவு பேணிச் சுற்றம் காத்து, நல்லிணக்கத்துடன் வாழ்ந்தவர்கள். வாழ்வில் மகிழ்ச்சியும், நிம்மதியும், திருப்தியும், மேலோங்கியிருந்தன. சூது. வாது. பொய். புரளி, ஊழல், திருட்டு என்பவற்றில் ஈடுபடப் பயந்தவர்கள். நற்செய்கை, நற்கருமங்களையே விரும்பி ஆற்றினார்கள்.

கடவுள் பயப்பாடு, சமூகப் பயப்பாடு ஆகிய இரண்டும் மனிதர்களிடம் இருக்கும் போதுதான், தீவினைகளைச் செய்ய அஞ்சுவார்கள். தெய்வத்தண்டனைக்குப் பயந்தும், சமூகம் தூற்றுமே என்பதற்கு அஞ்சியும் தான் கெட்ட நடத்தைகளிலும், கூடா ஒழுக்கங்களிலும் இருந்து மனிதர்கள் விலகியிருக்கின்றனர். கடவுளுக்கும் சமூகத்திற்கும் மதிப்புக் கொடுக்காமல், தன்னிச்சையாகக் கருமங்களை ஆற்றத் துணிபவர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழிவாங்களுக்கு அஞ்சுவரில்லை. இன்றைய சமுகங்களில், கற்றவர்கள், கல்லாதவர்கள் என்ற வேறுபாடின்றிக் கொடுஞ் செயல்களிலும் ஈடுபடுதலுக்குக் காரணம், சமய ஆசார அனுஸ்டானங்கள், சமய ஒழுக்கங்கள் என்பன பெரிதும் அலட்சியப்படுத்தலேயாகும். சமயம் என்பது ஒழுக்கம்.

நம் முன்னோர்களின் சமய வாழ்க்கை ஆசார சீலங்களுடன் கூடியதாக விளங்கியது. அதுவே ஆன்மிக வாழ்வாகவும் மலர்ச்சி பெற்றது. வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதலே ஆன்மிக வாழ்வு. அதிகாலையில் நித்திரை விட்டு எழுந்து, பல் தேய்த்து, நீராடி, தூய ஆடைதரித்து, நெற்றியில் திருநீறிட்டு பொட்டுவைத்து, கடவுள் வழிபாடு செய்த பிறகே உணவு மற்றும் பானம் அருந்துவார்கள். வெளியே போய் வந்தால், கைகால்களையும் முகத்தையும் கழுவிய பின்னரே வீட்டிற்குள் செல்வது வழக்கம். பிறப்பு, இறப்பு வீடுகளுக்கு சென்று வந்தால் குளித்து முழுகிய பிறகே, வீட்டிற்குள் செல்வார்கள். இவையாவும் சமய ஆசார அனுட்டானங்களினூடாக ஏற்படுத்தப்பட்ட சுகாதார பழக்க வழக்கங்கள்.

ஒவ்வொரு வீட்டிற்கும் விடியற்காலையில் மகாலட்சுமி வருகை தருவாளாம். அதனால் வீட்டையும், முற்றத்தையும் கூட்டிப் பெருக்கி, வாயிலில் சாணம் அல்லது மஞ்சட் தண்ணீர் தெளித்து, சுத்தம் செய்து, மாக் கோலம் போட்டு வீட்டுக்குள்ளே தீபம் ஏற்றி, தாமும் நீராடிப் பூ முடிந்து, மங்சள், குங்குமம் இட்டு மகாலட்சுமியைப் பெண்கள் வரவேற்கத் தயாராவார்கள். இப்படியான ஆசாரமுள்ள சைவக்குடும்பங்களில் மகாலட்சுமி நிச்சயமாக கொலுவீற்றிருப்பாள். மகாலட்சுமி உறையும் இடங்களின் எல்லா வகைச் செல்லவங்களும் காணப்படும். மகிழ்ச்சி, செழிப்பு, ஐசுவரியம், பரிமளிப்பு, தெய்வீகம் யாவும் பொழியும்.

இன்று அநேகமானவர்கள் சூரியன் உதித்தும், வெகு நேரத்திற்கு பின்னரே படுக்கையை விட்டு எழுந்திருக்கிறார்கள். படுக்கையில் இருந்துகொண்டே கோப்பியோ, தேனீரோ அருந்துகின்றார்கள். அது வரை பல்தீட்டி வாய்கொப்பளிப்பது கிடையாது. அதன் பின் காலை உணவு உண்கின்றார்கள். அதன் பின் குளிக்கிறார்கள். உடுத்த ஆடையையே உடுக்கிறார்கள். கடவுள் சிந்தனை, வழிபாட்டிற்கு நேரம் கிடையாது. அவசர அவசரமாகத் தொழில்த் தலங்களுக்கு விரைகிறார்கள். இவ்வாறு எல்லாமே அடி தலைமாறிய வாழ்க்கை முறையாகவே காணப்படுகின்றது. இந்த நிலையில் உடல் ஆரோக்கியம், உள ஆரோக்கியம் எப்படி இருக்கும். குடும்பத்தில் விடிவு எவ்வாறு ஏற்படும்? இது பற்றிச் சைவமக்களாகிய நாம் ஆற அமர இருந்து சிந்தித்து பார்க்க வேண்டும். குடும்பத்தில் பெரியவர்கள் எப்படி நடந்து கொள்கின்றார்களோ, குழந்தைகள், இளைஞர்கள் ஆகியோரும் அப்படித்தான் நடந்து கொள்வார்கள். அப்பா, அம்மா மற்றும் பெரியவர்கள் சைவ ஆசாரங்களையும் ஒழுக்கங்களையும் பேணி வந்தால், நிச்சயமாக பிள்ளைகளும் ஆசார சீலர்களாக வளர்வார்கள். குடும்பங்களில் நிலவும், ஆசார அனுட்டானங்களுடன் வாழ்வது நாகரிகக் குறைவு, பிறர் பழிப்புக்குரியது என்று எண்ணி மனம் போன போக்கில், அடிதலைமாறிய நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருப்பதனால்தான் இத் துணை அவலங்களை எதிர்நோக்குகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்து ஆலய மகோற்சவங்களில் *தேர்த்திருவிழா* பெறும் முக்கியத்துவம்.

சண்முகலிங்கம் சஜீலன், பன்னாலை தெல்லிப்பழை

ஆன்மீக உலகில் சனாதன தர்மத்தின் ஊற்றுக் கண்ணாக விளங்குவது பாரத தேசமாகும். நம் இந்து சமயத்தின் அத்தனை தத்துவக் கோட்பாடுகளும் அதற்கான செயல்நெறி முறைகளும் அங்கிருந்தே உலகெங்கும் வியாபித்துச் சென்றது. பாரத்தின் உபகண்டப் பிரதேசமாக இருக்கக்கூடிய ஈழமும் அதன் மக்கள் கூட்டமும் அதே கலாசாரப் பண்பாட்டு நெறிமுறைகளுக்கூடாக சைவமும், தமிழும் என்ற ஒன்றிணைந்த பண்பாட்டை தொன்று தொட்டு கடைப்பிடித்து வாழ்ந்து வந்ததன் பயனாக ஓர் உயர் நாகரிகப்பண்பாட்டை உலகிற்கு எடுத்தியம்பியவர்களாக அறியப்படுகின்றனர். இவற்றில் தமிழகம், ஈழம் எனும் இரு புலத்திலும் சிவவழிபாடு முக்கியத்துவம் பெற்றிருந்ததுடன் ஆலயம் அமைத்து அதில் பரம்பொருளை சாந்நித்தியம் செய்து வழிபாடு செய்யும் பண்பாட்டு மரபும் தோற்றம் பெற்றது. இப்பண்பாட்டு மரபில் கி.பி 6ம் 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த நாயன்மார்கள் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தொடக்க காலத்தில் ஆகமமுறை சாராத பாரம்பரிய ஆலய வழிபாட்டுமுறை பின்னர் ஆகமமுறை சார்ந்த ஆலய வழிபாட்டு முறையாக மாற்றமடைந்து சென்றது. இதனால் ஆகமமுறை சார்ந்த கிரியை நெறிமுறைகள் முக்கியத்துவம் பெற்றன.

ஈழத்தில் தமிழர்களின் கலாசாரப் பண்பாட்டுத் தலைநகரெனப் போற்றப்படும் யாழ்ப்பாணத்தில் ஆலயப்பண்பாடு மிக உயர்நிலையில் பின்பற்றப்பட்டு பேணப்பட்டு வருகிறது. ஆலயப்பண்பாட்டில் ஆலயத்தில் நடைபெறும் உற்சவங்களும், விசேட வழிபாடுகளும் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. இதனால் யாழ்ப்பாணத்தில் ஆலயங்களில் நடைபெறும் மகோற்சவங்களும் விசேட உற்சவங்களும், வழிபாடுகளும் உலகில் மிகுந்த கவனயீர்ப்பைப் பெறுவதுடன் இங்கு நடைபெறும் மகோற்சவத் திருவிழாக்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவையாகவும் உள்ளன. பொதுவாக மகோற்சவங்களும் அவற்றில் நடைபெறும் கிரியைகளும் இறைவனின் ஐந்தொழில்களை (படைத்தல், காத்தல், மறைத்தல், அருளல், அழித்தல்) குறிப்பவையாக கருதப்பட்ட போதிலும் யாழ்ப்பாணத்து ஆலயங்களில் நடைபெறும் மகோற்சவத் திருவிழாக்கள் அதனையும் தாண்டிய ஒரு மக்கள் ஆதரவைப் பெற்றவையாகவும் ஆன்மீக உள்ளுணர்வின் வெளிப்பாடாகவும் பார்க்கப்படுகின்றன. ஒரு ஊரில் கோயில் திருவிழா தொடங்கிவிட்டால் அந்த ஊரே மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் மூழ்கிவிடும் என்பதுடன் ஒரு வாரத்திற்கு முன்பே மகோற்சவத்திற்கான ஆயத்தப்பணிகள் தொடங்கிவிடுவதனையும் அவதானிக்கலாம். பெருந்திருவிழா அல்லது மகோற்சவம் பஞ்சாங்கத்தின் உறுப்புகளான திதி அல்லது நட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டு ஆரம்பிக்கப்படுபவையாகும். இப் பெருந்திருவிழாக்கள் கொடியேற்றம், வாகனத்திருவிழா, மஞ்சம், கைலாச வாகனம், தேர், தீர்த்தம், பூங்காவனம், என அமையும். இவற்றுள் கொடியேற்றம், தேர், தீர்த்தம் என்பன விசேட திருவிழாக்களாக அமைபவையாகும்.

### தேர்த்திருவிழா பெறும் முக்கியத்துவம்

யாழ்ப்பாணத்து சைவாலயங்களில் நடைபெறும் மகோற்சவ விழாக்களில் தேர்த்திருவிழா அல்லது இரதோற்சவம் எனப்படும் திருவிழா ஏனைய திருவிழாக்களை விட மிகுந்த முக்கியத்துவமும் தனிச்சிறப்பும் வாய்ந்ததாக உள்ளது. அதிக பக்திப்பரவசத்துடனும், அதிக அடியார்களின் ஒன்று கூடலுடனும் நடைபெறுவது இத்திருவிழாவாகும். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அனேக பிரபலமான ஆலயங்கள் கொடியேற்றம் கண்டுவிட்டால் அடுத்து எப்போது இரதோற்சவம் நடைபெறுமெனக் காத்திருந்து அதனை மக்கள் கண்டு களிக்கும் நடைமுறை காலாதி காலமாக பின்பற்றப்பட்டு வருகிறது. பொதுவாக மகோற்சவத் திருவிழாக்கள் இறைவனின் ஐந்தொழில்களைக் குறிப்பவை என ஏலவே கண்டோம். இவற்றில் இரதோற்சவம் அல்லது தேர்த்திருவிழா அழித்தல் தொழிலைக் குறிக்குமென சைவ ஆகமங்கள் கூறுகின்றன. அழித்தல் தொழிலைக் குறிக்கும் திருவிழாவிற்கு ஏன் இத்தனை முக்கியத்துவம், எதற்காக அதிக பக்தர்கள் ஒன்று கூடுகிறார்கள். இதற்கு விடை காண்பது மிக இலகுவானது. மகோற்சவத்தில் இரதோற்சவம் முக்கியத்துவம் பெறுவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியை முறைகளில் மகோற்சவத்தின் ஏனைய திருவிழாக்களைப் போன்றே இரதோற்சவத்திற்கான கிரியை முறைகளும் அமைகின்றன. எனினும் மிகவும் பக்திமயமான சூழலில் இத்திருவிழா நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக வசந்த மண்டபத்திலிருந்து சுவாமி தேருக்கு எழுந்தருளிச் செல்லும் விதமும், பக்தர்களின் அரோகரா ஒலியும், மங்கள வாத்தியங்களான தவில், நாதஸ்வரத்திலிருந்து எழும் மல்லாரி இசையும் இதனைப் பார்க்கும் ஒரு பக்தரை பக்திப்பரவசத்தில் ஆழ்த்திவிடும் தன்மை வாய்ந்தது. தன்னிலை மறந்து ஒருகணம் இறைவனுடன் ஒன்றச் செய்துவிடும். இக்கணத்தில் ஒருவரது ஆணவம் அழிந்து போவதை அல்லது நான் என்ற மமதை அற்றுப்போவதைப் பார்க்கலாம். இதுவே தேரத்திருவிழாவின் தத்துவ விளக்கமாகவும் அமைகிறது. இத்திருவிழாவின் முக்கிய நோக்கமே எம்மைப் பீடித்திருக்கும் ஆணவம், கன்மம், மாயை எனற மும்மலங்களையும் அழிப்பதாகும். இது இத்திருவிழாவின் பக்தி மயச்சூழலில் நிதர்சனமாவதை கண்கூடாகப் பாரக்கலாம். நல்லூர்க்கந்தசுவாமி கோவில் தேர்த்தரிசனம் செய்யவரும் பக்தர் ஒருவரின் எண்ணப்பதிவொன்று இத்திருவிழாவின் தத்துவத்தை விளக்கப் போதுமானது.

*'நல்லூர் முருகன் தேரில் ஆரோகணித்து வீதிவலம் வருவதற்காக கீழைக்கோபுர வாயிலில் இருந்து தேர்முட்டி வரை எழுந்தருதளுங்காட்சியை கடந்த ஐம்பது வருடமாகத் தவறாது கண்டு தொழுது ஆனந்தமுற்ற போதிலும் இன்னும் என் அவா அடங்கவில்லை. நான் எங்கிருந்தாலும் நல்லூர் முருகன் தேரில் ஏறிச் செல்லும் அற்புதக்காட்சியைக் காண்பதற்காக இங்கே வந்துவிடுவேன். என்றும் இவ்வழகிய திருக்கோலத்தைக் காண்பதற்கே யான் மீண்டும் இப்புவியில் பிறக்க ஆசைப்படுகின்றேன். இத்திருக்கோலத்தைக் காணத்தவம் செய்திருத்தல் வேண்டும்.'*

பொதுவாக இருவகையான தேர்கள் யாழ்ப்பாணத்து ஆலயங்களில் உண்டு. ஒன்று தேரின் அடிப்பீடம், சுவாமி எழுந்தருளும் சிம்மாசனம் என்பன நிரந்தரமாக அமைக்கப்பட்டு தேரின் மேல் விதானம் (விமானம்) தேவைக்கேற்ப அமைக்கக்கூடியதாக உள்ள கட்டுத்தேர் எனக்கூறப்படும் தேர் ஒரு வகையாகும். மற்றையது தேரின் அடிப்பீடம் சுவாமி எருந்தருளும் சிம்மாசனம், மேல்விதானம் என்பன நிரந்தரமாக அமைக்கப்பட்டு இரதம் அல்லது சித்திரத்தேர் என அழைக்கப்படும் தேர் இன்னொரு வகையாகும். மேல் விதானம் நிரந்தரமாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் எனப்படும் தேர் வகையே தற்போது யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான ஆலயங்களில் காணப்படுகிறது. தேர் வீதியுலாவின் போது தேரில் எழுந்தருளிவரும் மூர்த்தியின் அழகுக்கோலமும், கதிரவனின் ஒளிக்கதிர்பட்டு பட்டொளி வீசிப்பறக்கும் சிவப்பு, வெள்ளை வர்ணத்திலமைந்த தேரின் கம்பீரத்தோற்றமும், மேல்விதானத்தின் எழுதக வரிச்சட்டங்களில் ஒளிக்கதிர்பட்டு மின்னும் சித்திரத்தேரின் அழகும் என்றும் வைத்த கண் வாங்காது பார்க்கத்தூண்டும் கண்கொள்ளாக் காட்சிகளாகும்.

### தேர்த்திருவிழாவும் அதிக அடியார்களின் ஒன்று கூடலும்

நீண்ட வரிசையில் அடியார்கள் வடம் பிடித்து இழுப்பதும், தேருக்குப் பின்னால் அடியார்கள் கூட்டுப்பிரார்த்தனை செய்து வரும் அடியவர்களும், அங்கப்பிரதட்சணை மற்றும் அடி அழித்தல் செய்து வரும் அடியவர்களும், காவடியெடுத்து ஆடிவரும் பக்தர்களின் அழகுக்கோலமும் தேர்த்திருவிழாவின் மகோன்னதக் காட்சிகளாகும். 'ஊர் கூடித்தேர் இழுத்தல்' எனும் கோட்பாட்டுக்கமைய இனம், மொழி, சாதி, பால் வேறுபாடின்றி அனைத்து அடியார்களும் வடம் பிடித்து தேர் இழுக்கும் நிகழ்வும், ஆண் அடியார்கள் ஒரு பக்கமாகவும் பெண் அடியார்கள் இன்னொரு பக்கமாகவும் நின்று தேர் இழுக்கும் நிகழ்வும் அதிக அடியார்கள் தேர்த்திருவிழாவில் ஒன்று கூடக்காரணமாக அமைந்துவிடுகின்றன. அத்துடன் தேரின் பிரமாண்டத்தையும் அதிகரித்த எடையும் தேரை அசையச் செயவற்கு அதிக எண்ணிக்கையான பக்தர்களை வேண்டி நிற்பன. யாழ்ப்பாணத்தில் பிரபலமான ஆலயங்களில் மட்டுமல்லாது ஓர் ஊரில் அல்லது கிராமத்திலுள்ள கோவில்களிலும் தேர்த்திருவிழாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர் ஓர் ஊர்தி என்ற வகையில் மிகத்தொன்மையான சிந்துவெளி நாகரிக காலத்திலேயே அறிமுகமாகியிருந்ததற்கான சான்றுகள் அகழ்வாராய்ச்சிகள் முலம் கிடைத்துள்ளன. என்பதுடன் பொதுவாக தேரும் அதன் வடிவமும் ஒரு ஆலயக் கருவறையுடனும் மனிதனது உடற்பாகங்களுடனும் ஒப்பிடப்படுகின்றன. தேர் ஓர் அசையும் ஆலயமாகவும் சுவாமி வீற்றிருக்கும் சிம்மாசனம் மனிதனது இதய ஸ்தானமாகவும் கருதப்படுகின்றமை பொதுவான அம்சமாகவுள்ளது. தேரின் புறத்தோற்றம் சுவாலை விட்டு எரியும் ஒரு தீயின் வடிவமாகவும் கொள்ளப்படுகிறது. வேதகாலத்தில் சிவபெருமான் பூமியைத் தேராகவும், சூரிய சந்திரர்களை அதன் சக்கரங்களாகவும், வேதங்களைக் குதிரைகளாகவும், பிரம்மாவை சாரதியாகவும், மேருமலையை வில்லாகவும் வாசுகி என்ற பாம்பை, அதன் நாணாகவும், விஷ்ணுவை அம்பாகவும் கொண்டு திரிபுர தகனத்திற்காக புறப்பட்ட தொன்மையான நிகழ்வே பின்னர் ஆலய மகோற்சவங்களில் தேர்த்திருவிழாவாக வடிவம் பெற்றது. ஆலயங்களில் கருவறையில் வீற்றிருக்கும் மூலமூர்த்தியின் அம்சமாகவுள்ள உற்சவமூர்த்தியே ஆன்மாவைப் பீடித்திருக்கும் மலங்களை அழித்தல் எனும் தத்துவத்திற்கமைய மிகவும் ஆக்ரோசமாக அகோர மூர்த்தமாக தேருக்கு எழுந்தருளுவதும் பின்னர் பச்சை சாற்றப்பட்டு சாந்தமூர்த்தமாக தேரிலிருந்து இறங்குவதும் தேர்த்திருவிழாவில் பொதுவாக நாம் காணக்கூடிய விசேட அம்சங்களாகும். சிவன் ஆலயங்களில் சோமஸ்கந்த மூர்த்தி அல்லது நடராஜரும், பிள்ளையார் ஆலயங்களில் பஞ்சமுக விநாயகரும், முருகன் ஆலயங்களில் ஆறுமுகசுவாமியும், அம்மன் ஆலயங்களில் அவ்வவ் ஆலயங்களுக்குரிய அம்பாளின் மூர்த்தி பேதங்களும், விஷ்ணு ஆலயங்மளில் வரதராஜமூர்த்தியும் தேருக்கு எழுந்தருளும் இறைமூர்த்தங்களாகும்.

தமிழகத் திருக்கோவில்களில் சிதம்பரம் ஆனித் திருமஞ்சனத் தேரோட்டம், திருவெம்பாவைத் தேரோட்டம், திருவாரூர் அழித்தேரோட்டம் மற்றும் திருவிடைமருதூர், ஸ்ரீவில்லிபுத்தூர், திருச்செந்தூர், மதுரை ஆகிய தலங்களில் நிகழும் தேரோட்டம் ஆகியன அதிக மக்கள் ஒன்று கூடலுடன் நடைபெறும் வெகு பிரசித்தம் வாய்ந்த தேர்த்திருவிழா நிகழ்வுகளாகும். ஈழத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மகோற்சவங்களையும் அலங்கார உற்சவங்களையும் காணும் ஆலயங்கள் பலவற்றிலும் தேர்த்திருவிழாவிற்கு அதிக மக்கள் மிகவும் பக்தியுடன் ஒன்று கூடுவதை அவதானிக்கலாம். அதிலும் பிரசித்தி பெற்ற ஆலயங்களான நல்லூர்க்கந்தசுவாமி ஆலயம், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் (1990ம் ஆண்டிற்கு முன்பு ஐந்து தேர்கள் வலம் வந்த பெருமைக்குரியது), செல்வச்சந்நிதி முருகன் ஆலயம், காரைநகர் ஈழத்துச்சிதம்பரம் எனப்போற்றப்படும் திண்ணபுரம் சிவன் ஆலயம் (திருவெம்பாவைத் திருவிழாவில் ஐந்து தேர்கள் வலம் வந்த பெருமைக்குரியது என்பதுடன் ஆருத்திரா தரிசனமும் விசேடமாக நடைபெறும் ஆலயமாகும்), நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம்,தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயம், துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலயம் ஆகியவற்றில் நடைபெறும் தேர்த்திருவிழாக்கள் அதிகமான அடியாரகளின் ஒன்று கூடலுடன் மிகவும் பக்திமயமான சூழலில் நடைபெறும் அற்புதமான திருவிழாக்களாக அமைவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக யாழ்ப்பாணத்து ஆலய மகோற்சவங்களில் தேர்த்திருவிழாவானது மனித ஆன்மாக்களை லயப்படுத்தும் நிகழ்வாகவும் அடியார்களை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தும் திருவிழாவாகவும் அமைவதை அவதானிக்கலாம்.

### உசாத்துணை நூல்கள்


1 சகலாகமசங்கிர மகோற்சவ விதி, பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா, புத்தூர் சிவன் தேவஸ்தான பிரதமசிவாசாரியார் பிரம்மஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள், ஸ்ரீமதி ஞானேஸ்வரி தம்பதியரின் ஷஷ்யப்த பூர்த்தி விழாச்சிறப்பு வெளியீடு. 2016

2 முகாஸ்தபதி கோவிந்தராஜவின் தேர்த்திறன் இவே. அம்பிகைபாகன், தென்னாசிய சமூகவிஞ்ஞான நிதிய வெளியீடு 2009.

3 இந்துப்பண்பாட்டில் தேர்க்கலை வரலாற்றுநிலை நிற்கும் ஓர் ஆய்வு, வே.அம்பிகைபாகன், கலைக்கேசரி சித்திரை 2019.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசித்தாந்தத்தில் சக்தி தத்துவம்

பேராசிரியர் கலாநிதி மா. வேதநாதன் (சித்தாந்தரத்தினம் M.A.Ph.D
தலைவர் இந்துநாகரிகத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**முன்னுரை:**

சைவசித்தாந்தம் என்பது பதி, பசு, பாசம் என்ற முப்பொருளுண்மையை நிலை நிறுத்தும் சமயதத்துவக் கொள்கையாகும். பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களையும் முறையே இறை, உயிர், தளை எனத் தமிழில் வழங்குவர். இறைவனைப் பற்றிய மிகவும் சிறந்த கொள்கையைச் சைவசித்தாந்தம் நமக்கு அளிக்கின்றது. சைவசித்தாந்த இறைகோட்பாட்டில் சக்திக்குத் தனிச் சிறப்புண்டு சைவசித்தாந்தத்தில் இறையருள் எனப்படும். திருவருளே 'சக்தி' என்று கூறப்படும். சக்தியை பெண்ணாகக் கொள்வது சைவசித்தாந்த மரபாகும். தத்துவம் என்ற சொல்லுக்கு உண்மை என்பது பொருளாகும். இவ்வகையில் சக்தியின் உண்மையை அறியமுயலும் அறிவியலே சக்தி தத்துவம் எனப்படும். சுத்த தத்துவங்களுள் ஒன்றாய்ச் சிவனது கிரியாசக்திக்கு இடமாக சுத்தமாயை காரியப்படுவதாயுள்ள விருத்தியையே சக்தி தத்துவம் எனவும் கூறப்படும். சைவ சித்தாந்தம் கூறும் சக்தி தத்துவத்தின் தனித்துவத்தினை அறிந்து கொள்வதற்கு சித்தாந்த சாஸ்த்திரங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. இக்கட்டுரையானது சைவசித்தாந்தத்தில் சக்தி தத்துவத்தின் தனித்துவத்தினையும் சிறப்பினையும் முக்கியத்துவத்தினையும் ஆராய்வதாக அமைகின்றது.

**சக்தி ஓர் இயல்வரையறை**

சக்தியை 'சக்தி' என்ற சொல்லாலேயே சைவசித்தாந்த சாஸ்திரங்கள் குறிப்பிடுகின்றன. இன்றைய வழக்கில் 'சக்தி' என்ற சொல்லே பெரிதும் பயன்பாட்டிலிருப்பதால் இக்கட்டுரையில் என்ற 'சக்தி' சொல் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடற்பாலதாகும். 'சக்தி' என்ற சொல்லுக்கு 'ஆற்றல்' அல்லது 'வல்லமை' என்பது பொருளாகும். சக்தியே பரம்பொருளாகக் கொள்ளும் சமயநெறி 'சாக்தம்' எனப்படும். ஆனால் சைவசித்தாந்தம் 'சக்தியின்றிச் சிவமில்லை சிவமின்றிச் சக்தியில்லை' எனக் கூறுவதால் சைவசித்தாந்தத்தில 'சக்தி' எப் பொழுதும் இறைவனோடு சேர்த்தே பேசப்பெறும். இறைவனது சக்தியை 'திருவருள்' எனவும், 'திருவடி' எனவும், 'சிவஞானம்' எனவும் 'அம்மை' எனவும் வழங்குவது சைவமரபாகும். (வச்சிரவேல் முதலியார், 1976: 54)

திருவருள் எனப்படும் சக்தியும் அதன் கூறுகளுமே இறைவனுக்குக் குணமும், சொருபமும் மற்றும் உடம்பு, கரணம், இடம், ஆடை, அணி முதலியனவும் ஆகும். இது பற்றி வச்சிரவேல் முதலியார் கூறும் விளக்கம் வருமாறு:

**"ஞாயிற்றின் ஒளியே ஞாயிற்றுக்குக் குணமும் சொருபமும் ஆகும். ஞாயிற்றால் நாம் எய்தும் பயன்கள் எல்லாம் அதன் கதிர் எனப்படும் ஒளியால் தான். இதே போலத் திருவருள் எனப்படும் சக்தியே முதல்வனுக்குக் குணமும் சொருபம் ஆகும். முதல்வனால் நாம் எய்தும் பயனெல்லாம் சிவசக்தியாலே ஆகும். ஞாயிறு சிவத்துக்கு உவமை அதன் ஒளிச்சக்திக்கு உவமை. நாம் ஒரு செயலைச் செய்யும் போது உடம்பு, கரணம் (கருவி), இடம், ஆடை, அணி என்பவற்றை அச் செயலுக்குத் தக்கவாறு கொண்டு செய்கிறோம். இதுபோல முதல்வனுக்கு உடம்பு, கரணம், இடம், ஆடை, அணி என்பவற்றையெல்லாம் அவன் திருவருள் எனப்படும் சக்தியும் அதன் கூறுகளுமே ஆகும்.**

**(க. வச்சிரவேல் முதலியார், 1976: 54-55)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனது 'சக்தி' என்றும் ஒன்றாகவே உள்ளது என சைவசித்தாந்தம் கூறினும், அது அருட்சக்தி, திரோதான சக்தி, பரிக்கிரகசக்தி என பல பேதங்களில் தொழிற்படுமெனச் சித்தாந்த நூல்கள் குறிப்பிடுகின்றன. சைவசித்தாந்த்தில் சக்தி தத்துவம் பற்றி அறிந்து கொள்வதற்கு இச்சக்திகள் பற்றிக் குறிப்பிடுதல் மிகவும் அவசியமானதாகும்'

**அருட்சக்தி**

சைவ சித்தாந்தம் இறைவனது சக்தியை 'அருள்' என்று குறிப்பிடுகின்றது. நாம் முதல்வனது அருளையே சக்தி என வழிபடுகின்றோம். இதனையே 'அருளது சக்தியாகும் அரன் தனக்கு' (சிவஞானசித்தியார், சுபக்கம், 239) என அருணந்தி சிவாசாரியாரும் 'அருள் சக்தியாமே' (சிவப்பிரகாசம், 74) என உமாபதி சிவாசாரியரும் குறிப்பிடுகின்றனர். எனவே சைவசித்தாந்தத்தில் 'முதல்வனது அருளே 'சக்தி' என்றும் சக்தியே 'அருள்' என்றும் கூறலாம். 'அருள்' என்ற சொல் மிகவும் ஆழமான பொருளைக் கொண்டது. சைவ சித்தாந்தமானது சிவனது அருளாகி இறையருளையே 'அருட் சக்தி' எனப் பொதுவாகக் குறிப்பிடுகின்றது. அதாவது அருளலைச் செய்யும் இறைவனது சக்தியே சைவ சித்தாந்தத்தில் அருட்சக்தி எனப்படும். அருட்சக்தி பெண் வடிவம் கொண்டது எம்மனோர் பொருட்டேயாகும். முதல்வனது எண் குணங்களுள் எல்லா உயிர்களிடத்தும் கைம்மாறு கருதாது கருணை செய்யும் 'பேரருள் உடைமையும்' ஒன்று என்பது குறிப்பிடப்பாலதாகும்.

ஆன்மாக்களின் பக்குவநிலைக்கு ஏற்றவாறும், பயன்படும் தன்மைக்கேற்பவும் இறைவனிடத்திலுள்ள பிரிவற்ற இயல்பாகிய கருணைக்குச் சைவ சித்தாந்திகள் அருட்சக்தி என்றும், பாரசக்தி என்றும், சிற்சக்தி என்றும், பெயர் சூட்டி வழங்குகின்றனர். (முத்துராமன், 1975:101) ஆன்மாக்களுக்கும் உலகுக்கும் தனது கடமைகளை செய்யும் பொருட்டு இறைவன் தன்னுடைய சிற்சக்தி மூலமே பல்வேறு வேடங்களை ஏற்கிறார். (ராமானுஜாசாரி, 1963:45)

சிவனுக்கு அபின்னமாயுள்ள சக்தி சிற்சக்தி எனப்படும். 'சித்' என்றால் 'ஞானசக்தி' என்பது பொருளாகும். 'ஞானமே' முதல்வனுடைய 'அருள்' (சிவப்பிரகாசம், 74) என்று கூறப்பட அம்முதல்வனிடத்தில் விளங்கும் 'அருள்' அவனுடைய சக்தியாகும். (சிவப்பிரகாசம், 74) எனவே சிற்சக்தியை, ஞானசக்தி என்று மட்டுமன்றி அருட்சக்தி என்று அழைக்கலாம்.

இறைவனிடத்தில் அன்பு கொண்டு துதிப்போருக்கு மட்டுமன்றி இறைவனை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கும் உறுதுணையாக இருந்து பரிபாலித்து வருவது அருட்சக்தி எனப்படும் இறையருளே ஆகும். (முத்துராமன், 1975,:98)

'சிவமும் சக்தியும் இருவேறு முதல்களல்ல' என்ற சித்தாந்த உண்மையை வலியுறுத்தவே சைவசித்தாந்திகள் சக்தியை 'சிவசக்தி' என்று சிறப்பாக குறிப்பிடுவர். இச்சிவசக்தியே பிரபஞ்ச காரியங்கள் நடைபெறுவதற்குக் காரணமாகும். (முத்துராமன், 1975: 95) இறைவனின் அருள் அல்லது 'ஆணை' எனப்படும் சிவசக்தி இறைவனிலிருந்து பிரிக்கமுடியாத கூறு ஆதலால் சைவசித்தாந்தத்தில் அது ஓர் உண்மையான பொருளாகும். அருட்சக்திதான் உயிர்களின் உயர்வுக்கெல்லாம் ஆதாரமாகவுள்ளது. உயிர்கள் அனைத்திற்கும் பாரபட்சமின்றி நன்மை அளிப்பதையே தன்னியல்பாகக் கொண்டு விளங்குவதும் அருட்சக்தியே ஆகும். எனவேதான் இறையருளாலேயே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் ஆகிய தொழில்கள் நடைபெறுகின்றன என்று சைவசித்தாந்திகள் கூறுவர். (முத்துராமன் 1975 : 101)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை தன் திருவருளைத் தனது திருவடி மூலமே வழங்குகின்றாள் (சிவஞானசித்தியார், பரபக்கம், மங்கல வாழ்த்து, 2 சிவப்பிரகாசம், பாயிரம் 2)

இறைவன் தானே நேரில் நின்று ஐந்தொழிலைச் செய்யாமல் தன் ஆற்றலாகிய சக்தியைக் கொண்டே ஐந்தொழில் செய்வதன் காரணத்தை அருணந்தி சிவாச்சாரியர் இறைவன் தன் நிலையில் எந்தவித விருப்பும் வெறுப்பும் இல்லாதவன், ஞானமே வடிவானவன், உயிர்கள் ஆணவமறைப்புக்கு உள்ளாகியிருப்பதால், அவற்றிற்கு அறிவு, விளக்கம் செய்யும் பொருட்டு இறைவன் கிழிறங்கிவர வேண்டியுள்ளது. எனவே உயிர்கள் உய்யும் பொருட்டும். தன் நிலையில் எந்த விதக்குறைவும் ஏற்படாதிருக்கும் பொருட்டும் ஐந்தொழிலை இறைவன் நேரடியாகச் செய்யாமை தன் குணமாகிய அருளைக் கொண்டு செய்கின்றான் (சிவஞானசித்தியார், சுபக்கம், 65) எனக் குறிப்பிடப்படுகின்றார்.

இறைவனுடைய பேராற்றலாகிய அருட்சக்தியே உலகங்களை அமைப்பதற்கும் அவற்றை ஒடுக்குவதற்கும் காரணமாய் உள்ளது. (முத்துராமன், 1975:102) அதனால் தான இறையருளின் பொருமையைப் புகழும் தன்மையை 'நீடு' பராசக்தி என்றும் உமாபதிசிவாசாரியார் மொழிவர். (சிவப்பிரகாசம் 14) இச்சாஞானக்கிரியா சக்திகள் தோன்றுவதற்கு அடிப்படையான சக்தியே பராசக்தி எனப்படும். (துகளறுபோதம். 42)

ஆன்மா இறைவனை காண்பதற்கும், வணங்குவதற்கும் இறையருளாகிய அருட்சக்தியே அவசியம் என சைவசித்தாந்தம் குறிப்பிடுகின்றது. இதனையே 'அவனருளாலே அவன் தாள் வணங்கி (திருவாசகம், சிவபுராணம், வரி, 18) என மாணிக்கவாசகர் மொழிகின்றார். அவனருள் என்பதும் சிவனருள் என்பதும் ஒன்றேயாகும். அவனருள் என்பது சிவனது சக்தியை குறிக்கும். இதனை 'ஈசன் தன் சக்தி' (சிவஞானசித்தியார், சுபக்கம், 230) என்பார் அருணந்தி சிவாச்சாரியார் அவனருள் என்றால் என்ன என்பதனை விளக்கம் வருமாறு:

'சூரியனுக்குக் கிரணம் போலவும் தீயினுக்குச் சூடு போலவும்
பூவினுக்கு மணம் போலவும் பழத்திற்கு ரசம்போலவும்
பண்ணிற்கிசை போலவுமுள்ள பராபரனாம் பானுவின் கிரணங்களாகிய கருணையாகியும் உலகமாகிய காரியத்துக்குத் துணைகாரணமாகியுள்ள பராசக்தியாகிய வல்லமையாம்' (சித்தாந்த வினாவிடை, 1985: 33) இவ்வகையில் நோக்கும் போது அவனருள் என்பது சைவசித்தாந்த அருட்சக்தியையே குறிப்பதாகக் கொள்ளலாம்.

அருட்சத்தியை மெய்கண்டதேவர் 'ஆணை' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார். இதனை அவர் 'ஆணையின் நீக்கமின்றி நிற்கும்' என்பர். (சிவஞானபோதம், சூத்திரம், 2) அருட்சத்தி 'ஆணை' எனக் கூறப்படுதல் பற்றியும், அதற்கும் இறைவனுக்கும் உள்ள பிரிக்க முடியாத தொடர்பு பற்றியும், ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை கூறும் விளக்கம் வருமாறு: 'அருட்சக்தி இறைவனாகிய முதல்வனுக்கு 'ஆணை' என்று செல்லப்படும். அவன் நினைப்பையே தனக்கு ஆணையாகக் கொண்டு அவ்வருட்சக்தி இயங்குவதால் அஃது ஆணை.

முத்தி நிலையிலும் அருட்சக்தியே உயிர்க்குயிராய் நின்று உதவுகின்றது. சைவசித்தாந்தம் வாழ்வியற் படிநிலைகளில் வாழும் ஒருவருக்கு இருவினையொப்பும், மலபரிபாகமும் ஏற்பட்டதன் பின்னர் இறைவனது திருவருள் எனப்படும் அருட்சக்தி அப்பக்குவமுடையவரது ஆன்மாவில் விழுகின்றது. இந்த அருள் வீழ்ச்சியினைச் சைவ சித்தாந்தம் 'சக்தி நிபாதம் '(சிவஞான சித்தியார், சுபக்கம், 254) எனக் குறிப்பிடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருள் பதியப் பெற்றவர் 'சக்திநிபாதர்' எனப்படுவர். (சிவஞானசித்தியார், சுபக்கம், 267) முத்திநிலையிலும் சக்திதத்துவம் சைவ சித்தாந்தத்தில் முதன்மை பெற்றிருப்பதனையே 'சக்திநிபாதம்' 'சக்திநிபாதர்' என்ற சித்தாந்தக் கலைச் சொற்கள் புலப்படுத்தப்படுகின்றன வெனலாம்.

## திரோதான சக்தி

சைவ சித்தாந்தத்தில் இறைவனது சக்தியாகிய 'திரோதான சக்தி' மிகவும் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. இது திரோதாயி, திரோதசக்தி, திரோதகம், ஆதிசக்தி ஆகிய பெயர்களாலும் அழைக்கப்படும். திரோதான சத்திக்குச் சைவ சித்தாந்தத்திலேயே தனிச் சிறப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. சைவ சித்தாந்திகள் மறைப் பாற்றலையே திரோதானசக்தி என்பர்.

திரோதான சக்தி குறித்து அருணைவடிவேல் முதலியார் கூறும் விளக்கம் வருமாறு: 'இறைவன் உலகத்தைத் தொழிற்படுத்தப்புகும் பொழுது அவனது சக்தி மலத்தைச் சார்ந்து நின்று அவற்றைத் தொழிற்படுத்தும் ஆதலானும், மலத்தின் தொழில் உயிரின் அறிவை மறைப்பதேயாகலானும் அம்மறைப்புத் தொழிலை அச்சத்தி மேல் ஏற்றி அச்சத்தியை 'மறைப்புச்சத்தி' என்பர். மறைப்புச் சத்தி எனினும் 'திரோதான சத்தி' எனினும் ஒன்றே இறைவன் உலகத்தைத் தொழிற்படுத்தத் தொடங்கும் நிலை 'ஆதி' எனப்படும். ஆதலின் திரோதான சத்திக்கு 'ஆதி சத்தி' என்பதும் பெயராயிற்று. ஆதிசத்தி, இச்சையால் நின்று விரும்பியும், அறிவாய் நின்று அறிந்தும், முயற்சியாய் நின்று செயலாற்றியும் வருதலின், அந் நிலையில் முறையே, 'இச்சாசத்தி, ஞானசத்தி'என்னும் பஞ்சசக்திகளாகச் சிறப்பாகக் குறிக்கப்பெறுகின்றன. (அருணைவடிவேல் முதலியார், 1975:158) இவ்விளக்கமானது சைவ சித்தாந்தத்தில் திரோதான சக்தி பெறும் தனித்துவத்தை மட்டிட உதவுகின்றது.

சூரியனால் தாமரைப்பூவுக்கு அலர்தலும், கூம்புதலும் நிகழுமாறு போல் சிவபெருமானது திரோதான சக்தியினால் மும்மலங்களும் தத்தம் காரியங்களைச் செய்யுமென காசிவாசி செந்திநாதையர் மொழிவர். (1996:43) திரோதான சத்தியானது பாகம் வருவித்தற் பொருட்டு ஆணவ மலத்தின் வழிநின்று மோக முதலியவற்றைத் தொழிற்படுத்துவதாகிய சிவ சங்கற்பத்துக்கு ஏதுவாதல் பற்றி மலம் என்று உபசரிக்கப்படும். (செந்திநாதையர், 1996:43)

திரோதான சத்தியைச் சைவ சித்தாந்தம் ஒரு மலமாக உருவகித்துக் கூறுவதனை, 'பாகமாம் வகைநின்று திரோதாயிசத்தி பண்ணுதலான் மலமெனவும் பகர்வர்' (சிவப்பிரகாசம், 20)

என்பர் உமாபதி சிவாசாரியர், திரோதான சத்தியானது ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதான சக்தி என்பவை குறித்து ராமானுஜாசாரி என்பவர் 'பாசத்தின் விசத்தை அழிப்பதற்கு வேண்டி உலக சுகத்திலும் துன்பத்திலும் ஆன்மாக்கள் தூண்டப்படுவது அவசியமாகிறது. இதைக் கருத்திற் கொண்டே இறைவன் பொருளின் உண்மைத் தன்மையை மறைத்து அம்மலத்தைச் சத்தி வாய்ந்ததாகச் செய்து விடுகிறார் இச்செயலே திரோதானம் எனப்படும். இது அவரது திரோதான சத்தியாகும்' எனக் குறிப்பிடுவது நோக்கற்பாலதாகும். (1963:31)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்த நோக்கில் பராசக்தியானது பொது வகையால் ஒன்றாய் விளங்குகின்றபோதும், ஐந்தொழில்களைச் செய்தலைக் குறித்து சிறப்பு வகையால் வியாபிக்குமிடத்துத் திரோதான சக்தி என நின்று இச்சை, ஞானம், கிரியை என மூவகைப்பட்டு வியாபிக்கும்.

பரிக்கிரக சக்தி

மலங்களுள் ஒன்றான 'மாயை' என்பது முதல்வனுக்கு ஒரு சக்தி எனச் சைவசித்தாந்தம் கூறும். தொழிற்குக் காரணமாய் நின்று வேண்டும் போது உதவும் மாயாசக்தியே பரிக்கிரகசக்தி எனப்படும். இதனை 'விமலனுக்கோர் சத்தி' (சிவஞானசித்தியார், சுபக்கம், 143) என அருணந்தி சிவாசாரியர் மொழிவர். மாயை சடமாயினும் உயிர்களின் மலத்தை நீக்குவதற்கு மருந்தாய் சிற்சத்தியைப் போல் ஒரு துணைக் காரணமாயிருந்தலின், அது உபகாரமாகச் 'சக்தி' எனப்படும். இதற்குஞ் சிற்சக்திக்கும் பேதங்காட்டுதற்கு இது பரிக்கிரக சக்தி எனப்படும். தொழிற்குக் காரணமாயும் வேண்டும்போது உபகாரப்படுவதாயுமிருக்கும் வைப்புச் சக்தியையே பரிக்கிரகசக்தி எனச் சைவசித்தாந்திகள் கூறுவர். (திருவிளங்கம், *1971:235*) மாயாசக்தி என்ற சொல்லை வேதாந்திகளும் குறிப்பிடுகின்றனராயினும், சைவ சித்தாந்திகள் கூறும் மாயா சக்தி வேறு: வேதாந்திகள் பேசும் மாயாசக்தி வேறாகும். சைவசித்தாந்தத்தில் மாயை ஓர் உள்பொருளாகும். வேதாந்ததில் அது ஓர் இல்பொருளாகும். இந்த ஓர் அம்சமே மாயாசக்திக்குச் சைவ சித்தாந்தமும் வேதாந்தமும் கொடுத்துள்ள முக்கியத்துவத்தை உணரப் போதுமானதாகும்.

சிவமும் சக்தியும்.

சைவசித்தாந்தத்தில் சக்தி தத்துவம் பெறும் இடத்தினை அறிந்து கொள்வதற்கு சிவத்திற்கு சக்திக்கும் உள்ள தொடர்பினைக் குறிப்பிடுதல் இன்றியமையாததாகும். சைவ சித்தாந்தம் கடவுளைச் சிவம், சக்தி என இருவகைகளில் வைத்துப் பேசுமேயொழிய, ஒரு வகையில் மட்டும் பேசுவது இல்லை. தில்லையம்பலக் கூத்தனின் திருவுருவம் சிவகாமி அம்மையுடன் வைத்தே வணங்கப் பெறுதல் சைவ மரபாகும்.

சிவம், சக்தி என்பன இரண்டு சொற்களாக இருந்தாலும் சித்தாந்த நோக்கில் இவை இரண்டும் சிவப்பரம்பொருளை இருநிலைகளில் குறிக்கும் சொற்களாகும். ஒன்றிலும் தோய்வின்றிச் சுயம்பிரகாசமாய் இருக்கும் நிலையில் பரம்பொருள் 'சிவம்' என அழைக்கப்படும். அதேசிவம் உயிர்களுக்குப் பொதுவகையில் உதவி செய்ய வெளிப்படும் போது 'சக்தி' எனப் பெயர்பெறும். உயிர்களுக்கு உதவும் முதல்வனது உருவத்திருமேனி அருள் வடிவம் என்பது சைவ சித்தாந்தக் கருத்தாகும்.

சைவசித்தாந்தத்தில் 'சிவம்' கதிரவன் போலும், 'சக்தி' கதிரவனது கதிர்கள் போலும் கொள்ளப்படுதல் மரபாகும் 'பகலவன் ஒருவனே, தன்னை நோக்கி நிற்கும்வழி, கதிரவன்' என்றும் உலகப் பொருள்களை விளக்கும் வழி 'கதிர்' என்றும் சொல்லப்படுதல் போல், முதற் பொருள் ஒன்றே தன்னை நோக்கிய வழி 'சிவம் என்றும் பிறபொருளை நோக்கி நிற்கும்வழி 'சக்தி' என்றும் சொல்லப்படும். இச்சக்தியினாலேதான் இறைவன் உலகத்திற்கு எவ்வகைச் செயலையும் செய்கின்றான்' (அருணைவடிவேல் முதலியார் *1975,150*) சிவன் தன்னுடைய சொரூப நிலையிலிருந்து தோற்றநிலை யெய்துகையில் சக்தியினிடமாகவே தோன்றுவான். (கந்தையா, *1991:72*) சைவசித்தாந்தத்தில் சிவமும் சக்தியும் ஒன்றேயல்லாது வேறு பொருள்களல்ல: அதாவது, இரண்டு முதல்களல்ல' என்பதே சைவ சித்தாந்தத்தின் அடிப்படையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமும் சக்தியும் இரு முதல்கள் அல்ல என்பதையும் சக்தியின்றிச் சிவமில்லை சிவமின்றிச் சக்தியில்லை என்பதையும் அருணைவடிவேலு முதலியார் கூறுவது வருமாறு

'பதிப்பொருள் ஒன்றே' சிவம், சக்தி என இரு தன்மைப்பட்டு நிற்றற்கு, கதிரவனும், கதிரும் சிறந்த உவமையாகக் காட்டப்பட்டும், கதிரவன் ஒருவனே ஆயினும், அவன் தானும், தனது கதிரும்' என இரு தன்மைப்பட்டு நிற்றலும், கதிரவன் தனது கதிர் வழியாகவே எங்கும் வியாபித்து நின்று பல செயல்களைச் செய்தாலும் நன்கறியப்பட்டவை அங்ஙனமாயினும், கதிரும் கதிரவனும் இருபொருள்கள் அல்ல? என்பதும், கதிரைவிட்டுக் கதிரவன் இல்லை கதிரவனைவிட்டுக் கதிர் இல்லை என்பதும் அங்ஙனம் நன்கு அறியப்பட்டனவாம்.

அது போலவே பதி, தானும், தன் சக்தியும் என இருதன்மைப்பட்டுத் தனது சக்தி வழியாக எங்கும் வியாபித்து எண்ணிறந்த செயல்களைச் செய்கிறான் எனவும், அங்ஙனமாயினும் சிவமும் சக்தியும் இரு முதல்கள் அல்ல எனவும், சக்தியின்றிச் சிவம் இல்லை: சிவமின்றிச் சக்தியில்லை எனவும் உணர்ந்து கொள்ளப்படும். (அருணைவடிவேலு முதலியார், 1994: 83-84)

சிவத்திற்கும் சக்திற்கும் உள்ள தொடர்பினை அறிந்து கொள்வதற்கு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் கூறும் விளக்கம் இங்கு குறிப்பிடற்பாலதாகும். 'இறைவனுடைய கருணைதான் பராசக்தி அந்தக் கருணையைத் தனியாக வைத்து அம்பிகையாக வழிபடுகிறோம். ஆகவே இறைவனுடைய கருணை உமாதேவியார் அதனாலே சக்தி வழிபாட்டிற்குச் சிறப்பு வருகிறது. சிவபெருமானுடைய நான்கு சக்திகளில் அருள்சக்தி பார்வதி என்றுணர்க. எனவே பொன் சிவபெருமான் அதில் செய்யப்பெறும் அணிகலன் அம்பிகை பால் சிவபெருமான் அதன் சுவை அம்பிகை, நூல் சிவபெருமான். நூலின் கனம் அம்பிகை, நெருப்பு சிவபெருமான், அதன் சூடு அம்பிகை சுடரே சிவபெருமான சூடு பராசக்தி.'

சிவத்தை 'இருக்கும் கடவுள் (God the neing) என்றும், சக்தி 'ஆகும் கடவுள் (God the becoming) என்றும் அழைப்பர். இருக்கும் நிலையில் 'சிவன்' என்றும், இயங்கும் நிலையில் 'சக்தி' என்றும் கூறுவர். வெளிப்பட்டால் சக்தி. அது வெளிப்படாமல் உள்ளடங்கியிருந்தால் சிவம்.' இதுவே சைவசித்தாந்த நிலைப்பாடாகும்.

## தாதான்மிய சக்தி

சைவசித்தாந்தம் சிவனது சக்தியை 'தாதான்மிய சக்தி' எனக் குறிப்பிடுகின்றது. தாதான்மிய சக்தி என்பது எக்காலத்தும் சிவனைவிட்டு பிரியாத சக்தி, அது அறிவே வடிவமானது. (செந்நிநாதையர், 1996:44) பொருளால் ஒன்றேயாயினும், ஒருவாற்றால் அது வேறுபட நிற்பது தாதான்மியம் எனப்படும். அதாவது ஒரு பொருள் வேற்றுமை தாதான்மியமாகும். சிவனுக்கு சக்திக்குமிடையேயுள்ள தாதான்மியத் தொடர்பை வடமொழியில் சமவாயம், சமவேதம் என்ற சொற்களாலும் வழங்குவர். சமவாயம் என்பது நீக்கமின்றி நிற்றல் எனவும், சமவேதம் என்பது நீக்கமின்றி நிற்பது எனவும் பொருள்படும். இதனையே ஆணையின் நீக்கமின்றி நிற்கும் (சிவஞானபோதம், சூத்திரம் 2),சக்திபின்னமிலான் எங்கள் பிரான்' (திருவருட்பயன், பதிமுதுநிலை, 2 ) என்ற சாத்திரத் தொடர்களும் குறித்து நிற்கின்றன. பின்னமிலான் என்பதற்கு முதல்வன் சக்தியோடு வேறுபடப் பிரிதலில்லாதவன் என்பது பொருளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளென ஒன்றும் தன்னையென ஒன்றும் இருக்குமளவுக்கு வேறுபாடல்லாமலுமில்லை இங்ஙனம் பொருளும் பொருட்டன்மையுமாய் ஒன்றையொன்று பிரிக்க முடியாத வகையில் இயைந்திருக்கும் பண்பைக் 'குணகுணிபாவம்' என்பர். (1991: 68)

சிவனுக்கு சக்திக்கும் தொடர்பு தாதான்மிய சம்பந்தம்' எனப்படும். இது பற்றி, அருணைவடிவேல் முதலியார் கூறும் விளக்கம் வருமாறு. 'முதல்வனும், அவனது சக்தியும் வேறல்ல. ஒன்றே, இரண்டு பொருளை 'ஒன்று' என்பது எப்படி எனின் கதிரவனும் (சூரியனும்) கதிரும் இரண்டு போலக் காணப்பட்டாலும் இரண்டும் ஒன்றேயாதல் போல சிவமும் சக்தியும் இரண்டு போலச் சொல்லப்பட்டாலும் இரண்டும் ஒன்றேயாம். ஒரு பொருள் இவ்வாறு இரு கூறாகக் காணப்பட்டது இயைந்து நிற்றலை தாதான்மிய சம்பந்தம் என்பர். (1974: 95)

ஒன்றைவிட்டொன்று பிரிக்கமுடியாத இத்தாதான்மிய சம்பந்தம் 'ஒருமையில் இருமை' என்ற தொடராலும் குறிக்கப்படும் (கந்தையா, 1991:69) இத்தாதான்மிய சம்பந்தத்தையே 'அரனிடம் மரபின் மேவியே அறுவகை நெறிகளும் பிறவுமாக்கிய இறைவி (கந்தபுராணம், கடவுள் வாழ்த்து, 7) என்று கச்சியப்ப சிவாசாரியாரும், 'சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன் புல்லும் பரிமளப்பூங்கொடி' (அபிராமி அந்தாதி, 28 ) என்று அபிராமிப்பட்டரும் குறிப்பிடுகின்றனர்.

குணகுணிபாவம்.

சைவ சித்தாந்திகள் சக்தியும் சிவனும் குணகுணிபாவத்தில் விளங்குவதைக் குறிப்பிடுவர். பராசக்தியைக் 'குணம் 'என்றும், இவற்றுக்குப் பற்றுக் கோடாகவுள்ள சிவனைக் 'குணி' என்றும், காலோத்தாராகமம் கூறுகின்றது. (செந்திநாதையர்,1996:76) குணகுணித்தன்மை பற்றி அருணைவடிவேல் முதலியாரின் விளக்கம் வருமாறு.

'சத்தியும் சிவமும் குணகுணித் தன்மையால் இரண்டு கூறுபட்டு இயைந்து நிற்கும். குணமும் குணியும் வேறுவேறல்ல. ஏனெனில் குணங்களை எல்லாம் தள்ளிப் பார்த்தால் குணி எங்கே இருக்கும்? மலர்குவி: மணம் குணம். இவை ஒன்றை விட்டு ஒன்று எங்கு இருக்கும்? இருக்கமாட்டா, அதனால் குணகுணிகளை வேறு வேறு பொருள்கள் என்று சாதிக்கும் நையாயிகள் முதலியோர் மதம் பொருந்தாதாம். இவற்றால் கதிரவன் தன்நிலையில் நிற்கும்பொழுது கதிரவன் என்றும் உலகில் பாவிநிற்கும் நிலையில் கதிர் என்றும் சொல்லப்படுதல் போல இறைவனும் தன்னிலையில் நிற்கும்பொழுது 'சிவம்' என்றும் உலகத்தோடு தொடர்பு கொள்ளும் போது 'சக்தி' என்றும் சொல்லப்படுகிறான். (1985: 95-96)

என விளக்குவர், 'குணகுணிபாவம்' பற்றி கந்தையா, 'சிவசக்தி ஒரு தனிப் பொருள் போற்காணப்படினும் அது சிவனுக்கு வேறன்று. ஆயினும் இவற்றில் பொருளென ஒன்றும் தன்மையென ஒன்றும் இருக்குமளவுக்கு வேறுபாடல்லா மலுமில்லை. இங்ஙனம் பொருளும் பொருட்டன்மையுமாய் ஒன்றையொன்று பிரிக்க முடியாத வகையில் இயைந்திருக்கும் பண்பைக் 'குணகுணிபாவம்' என்பர். (1991: 68)

**அம்மை அப்பன் தத்துவம்.**

உலகிற்குமூலம் 'அம்மை அப்பரே' என்பது சைவசித்தாந்தக் கருத்தாகும். இதனையே திருக்கடவூர் உய்ய வந்ததேவர், 'அம்மையப்பரே உலகுக்கம்மையப்பர் (திருக்களிற்றுப்படியார், 1) எனக் குறிப்பிடுகின்றார். மானிடராகப் பிறந்த யாவரும் தாய் தந்தையர்களின் மூலமாகத்தான் இவ்வுலகில் பிறந்துள்ளோம். எந்த உயிரினத்தை எடுத்துக் கொண்டாலும் இந்த உண்மைதான் அடிப்படையாக அமைந்திருப்பதை நாம் காணமுடிகிறது. இந்த உண்மையைத்தான் சைவசித்தாந்திகள் ஏற்றுக் கொண்டு சிவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அப்பன்' என்றும் சக்தியை 'அம்மை' என்றும் குறிப்பிடுகின்றனர். சிவமூர்த்தங்கள் பலவும் அம்மையுடனாகக் காணப்படுவது, முதல்வன் ஒருவனே சிவமும் சக்தியும் என இருதிறப்பட்டு இயைந்து நிற்கும் சைவசித்தாந்த உண்மையினைச் சுட்டுவதாகும். அப்பனாகிய சிவனுடன் அம்மையாகிய சக்தி சேர்ந்து விளங்கும்போதே இவ்வுலகிலுள்ள இயங்கும் பொருட்களும் இயங்காப் பொருட்களும் ஆண் பெண் தன்மையில் கூடி மகிழும். இன்றேல் அவை கூடாது பிரியும். முதல்வன் கல்லால் நிழலில் தஷிணாமூர்த்தியாய் இருந்தபோது உயிர்கள் கூட்டுறவின்றி இன்புறாமல் இருந்ததையும் அமைமையை மணந்து அம்மையப்பரான பொழுதே எல்லா உயிர்களும் இன்புற்றிருந்தன எனவும் கந்தபுராண வாயிலாக அறிகின்றோம். தென்பாலுகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன் பென்பாலுகந் தாடுவதற்கான காரணத்தை மணிவாசகர் கீழ்க்கண்டவாறு பாடியுள்ளார்.

> **'தென்பாலுகந்தாடுந் தில்லைச் சிற்றம்பலவன்**
>
> **பெண்பாலுகந்தான் பெரும்பித்தன் காணேடி**
>
> **பெண்பாலுகந்திலனேற் பேதாய் இருநிலத்தோர்**
>
> **விண்பாலியோகெய்தி வீடுவர்காண் சாழலோ'**

(திருவாசகம், திருச்சாழல், 9)

## அர்த்தநாரீஸ்வரர் தத்துவம்.

சைவசித்தாந்தம், முதல்வன் அம்மையப்பராகி இருவடிவில் தோன்றினும் ஒரே வடிவில் தோன்று வதும் உண்டு எனக் குறிப்பிடுகின்றது அந்நிலையில் முதல்வனின் உருவம் 'அர்த்தநாரீஸ்வரர்' எனக் கூறப்படும் அர்த்தம் என்றால் பாதி, நாரி என்பதற்கு 'மாது' என்பது பொருளாகும். எனவே அர்த்த நாரீஸ்வரர் என்பதற்கு பாதிமாதுடைய பரமன் என்பது பொருளாகும். ( ஆறுமுகநாவலர். *1991:39*)

இதனையே அருணந்தி சிவாசாரியர் முதலுருப் பாதிமாதர்(சிவஞானசித்தியார், சுபக்கம் 69) எனவும், யாதொரு தெய்வங் கொண்டிரத் தெய்வமாகியாங்கே மாதொரு பாகனார்தாம் வருவர்' (சிவஞானசித்தியார், சுபக்கம் *115*) எனவும் மொழிவர், இவ்வடிவினையே மணிவாசகர் 'தொன்மைக் கோலம்' (திருவாசகம், திருக்கோத்தும்பி, *18*) எனக குறிப்பிடுகின்றார். அர்த்த நாரீஸ்வரர் குறித்து அருணை வடிவேல் முதலியார் கூறுமவிளக்கம் வருமாறு: சிவபெருமான் தனது திருமேனி ஒருபாதி ஆண் உருவாகவும் மற்றொருபாதி பெண் உருவாகவும் இருக்கின்றான் என்று சொல்வதும் முதல்வன் ஒருவனே சிவமும் சக்தியுமென இரு நிறப்பட்டு இயைந்து நிற்றலைக் குறிப்பதாகும். *(1975:97:98)*

ஆணும் பெண்ணும் என்றும் சமமானவர்கள் என்பதைச் சுட்டும் சைவசித்தாந்த வடிவமே அர்த்த நாரீஸ்வரராகும். இவ்வடிவம் சைவமும் சாக்தமும் ஒன்றிக்கலந்து மகிழும் சமயப் பொறையைச் சுட்டுவதாகவும் உள்ளது. சித்தாந்த சைவர்களால் நாளும் வழிபடப்பெறும் சிவனது அருவுருவத்திருமேனியான சிவலிங்கமானது பீடமும் இலிங்கமுமாக அமைந்திருக்கும் பாங்களானது சிவபெருமான் சக்தியாயும், சிவமாயும் விளங்கும் சைவசித்தாந்த உண்மையின் வெளிப்பாடே எனலாம். இலிங்கமாக இருக்கும் பகுதி சிவத்தினதும் பீடமாகயிருக்கும் பகுதி சத்தியினதும் அறிகுறிகளாம். *(மு.கந்தையா:1991:73)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி ஒன்று.

சைவசித்தாந்த நோக்கில் சிவம் ஒன்றேயாதல் போன்று 'சக்தியும் ஒன்றே' எனலாம். சக்தி ஒன்றேயாயினும் அது செய்யும் தொழில் பற்றிப் பலவாகச் சொல்லப்படுகின்றது. அது நெருப்பிலுள்ள சக்தி ஒன்றேயாயினும், அது 'சுடும்சக்தி' பாகம் பண்ணும் சக்தி, விளக்கும்சக்தி' எனத் தொழில் பற்றிப் பலவாறாகச் சொல்லப்படுதல் போல்வதாகும். (அருணைவடிவேல் முதலியார், 1975:96-97)

சக்தி ஒன்றே, தொழில் வேறுபாட்டால் பலவாக விளங்குகின்றதெனவும், அச்சக்தியானது முதல்வனோடு பிரிவின்றி நின்று அம்முதல்வன் நினைத்தபடி போக மோட்சங்களைக் கொடுக்குமெனவும்' அருணந்தி சிவாசாரியார் சக்திக்கும் இலக்கணம் கூறுகின்றார் இதனையே சிவஞானசித்தியார.

'சத்திதான் பலவோ என்னில் தான் ஒன்றே அநேகம் ஆக

வைத்திடும் காரியத்தால் மந்திரிஆதிக்கு எல்லாம்

உய்த்திடும் ஒருவன் சக்தி போல் அரண்உடையது ஆகிப்

புத்தி முத்திகளை எல்லாம் புரிந்து அவன் நினைத்தவாறாம்'

(சிவஞானசித்தியார், சுபக்கம், 81)

எனக் குறிப்பிடுகின்றது.

'சத்திகள் அநேகமே' என்று கேட்பின், சக்தி ஒன்றே பிரமன் முதலியோரிடம் நின்று செய்யுந் தொழில் வேறுபாட்டாற் 'செநநி' முதலிய பல சக்திகளாக வைத்து எண்ணப்படும். அது அமைச்சர், படைத்தலைவர், பாடிகாவலர் முதலாயினாரிடத்துத் தொழில் வேறுபாட்டாற் பலவகைப்பட நின்று செலுத்துதம் அரவனது சக்தி ஒன்றாயிருத்தல் போலாம். அச்சத்தி முதல்வனோடு பிரிவின்றி நின்று போக மோட்சங்களை அம் முதல்வன் நினைத்தபடி கொடுக்கும்' என்பது மேற்படி பாடலில் பொருளாகும்.

ஈசனருளிச்சை யறிவியற்றலின்ப

மிலயமொடு போகமதி காரமாகித்

தேச ரூப மருவுருவ முரவ மாகித்

தேவியுமாய்த் தேசமொடு செல்வமாகிப்

பேசய வுயிரையெல்லாம் பெற்று நோக்கிப்

பெரும்போக மவையளித்துப் பிறப்பினையு மொழித்திட

டாசகலு மடியருளத் தப்பனுடனிருக்கு

மன்னையருட் பாதமலர் சென்னிவைப்பாம்'

(சிவஞானசித்தியார்,பரபக்கம், மங்கல வாழ்த்து, 2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எனக் குறிப்பிடுகின்றார். இதன் பொருள் பின்வறுமாறு கூறப்படும்.

'கருத்தாவை விட்டு நீங்காத சக்தியானது அவனது திருவுள்ளத்தாலே பராசக்தியும், இச்சா சக்தியும், ஞானா சக்தியும், கிரியா சக்தியும், திரோதானசக்தியும் இவை யேயன்றிச் சங்காரத்தோது திதி சிருஷ்டிகளுமாய், அந்தச் சோதி வடிவான, ரூபம் எனப்பட்ட மூன்று முறைமைக்கு அவற்றிகேற்ற வடிவும் தாமாய்க் கர்த்தா அப்படிக் கொண்டருளும் திருமேனிக்கு அந்தச் சக்திகளும், தானாய், பிரபஞ்சங்களும், பதார்த்தங்களும் தானாய், கர்த்தா எடுத்துக் கொண்ட திருமேனிக்கு ஏற்ற சத்தியாய் நின்று எண்ணுதற்கு அரியதாகி சர்வான்மாக்களையும் படைத்து, அளித்து, ஆன்மாக்கள் செய்த புண்ணிய பாவங்களுக்கு ஈடாகச் சொர்க்காதி பதங்களையும் கொடுத்துப் பிறவிகளையும் கொடுத்துக் கர்த்தாவோடு கூடி நின்று முத்தியையும் கொடுத்து அஞ்ஞானம் நீங்கின அடியார் இதயத்திலும் கர்த்தாவோடும் கூடியிருக்கும் உலக மாதாவினுடைய கிருபையாகிய திருவடித் தாமரைகளைத் தலைமேல் வைத்துக் கொள்வோம்'

சிவன் தன் சொரூப நிலையிலிருந்து தடத்த நிலை எய்தி உயிர்களுக்குத் தநு, கரண, புவன போகங்களைத் தந்து வாழவைத்து, மலங்களை நீக்கி அவற்றை உய்வித்தல் சார்பான சகல காரியங்களும், சிவனிடத்திலிருந்து வியாபாரிக்குஞ் சக்தியைத் துணைக் காரணமாகக் கொண்டே அமைகின்றன. (மு. கந்தையா, *1991: 74*) உலக உற்பத்தியில் சத்தி துணைக் காரணமாகவே விளங்குவது சைவசித்தாந்த சத்தி தத்துவத்தின் சிறப்பம்சமாகும். *(சிவஞானசித்தியார், சுபக்கம், 38)*

அன்னையும் கன்னியும்

சக்தி, உலகுயிர்களைப் பெற்று வளர்க்கும் அகிலாண்டேஸ்வரியாக விளங்கும் அதே நேரத்தில் என்றும் விகாரமடையாத கன்னியாகவும் விளங்கும் சிறப்பு இயல்பினள் என்பதையே,

சிவஞ்சத்தி தன்னை யீன்றுஞ் சத்திதான்
சிவத்தை யீன்றும்
உவந்திரு வரும்பு ணர்ந்திங் குலகுயிரெலா மீன்றும்
பவன்பிரமசாரி பான் மொழி கன்னியாகும்'

*(சிவஞானசித்தியார், சுபக்கம் 167)*

அன்னையைக் 'கன்னி' எனச் சைவசித்தாந்தம் கூறுதல் பற்றி 'திருவருட் செல்வி' என்ற பெயராலும் சக்தியை வழங்குதல் யோகநாதர்கள் மரபாகும். கன்னியும், செல்வியும் ஒத்த கருத்துடைய சொற்களென்பது நோக்கற்பாலதாகும். சக்தியைக் கொண்டே தொழில்கள் நிகழும் இறைவன் தனது தொழில்கள் அனைத்தையும் சக்திகளைக் கொண்டே செய்கிறான். இதனை,

'நங்கையினால் நாம் அனைத்தும் செய்தாற்போல் நாடனைத்தும்
நங்கையினால் செய்தளிக்கு நாயகனும்'

எனச் சைவசித்தாந்தம் குறிப்பிடுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று திருக்களிற்றுப்படியார் குறிப்பிடுகின்றது. இங்கு, நங்கையினால் செய்தளிக்கும் நாயகன்' என்பதிலுள்ள 'நங்கை' என்பது சக்தியினையும் 'நாயகன்' என்பது சிவத்தையும் குறித்துநிற்கின்றன.

உலகுரியர்களுக்கு உதவும் பொருட்டு சிவனது செயல்களனைத்தும் சக்தியின் வாயிலாகவே நிகழ்த்தப்படுகின்றன என்ற சைவசித்தாந்த் உண்மையை உணர்த்தவே அருணந்தி சிவாசாரியார் 'அவளால்' வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை யெல்லாம்' (சிவஞானசித்தியார், சுபக்கம், 89) என்றும் குறிப்பிடுகின்றார். எனவே எம் எல்லோரது நல்வாழ்வுக்கும் வளத்திற்கும் சக்தியே அடிப்படை ஆகும்.

சக்தியின் வடிவம்:

அறிவே சத்தியின் உண்மைவடிவமாகும். அதாவது மறைந்தலில்லாத சுத்த ஞானமே சக்தியின் வடிவமாகும் இதனையே 'சத்திதன் வடிவு ஏத எனில் தடை இலாஞானம் ஆகும். என அருணந்தி சிவாசாரியர் மொழிவர். (சிவஞானவசித்தியார், சுபக்கம், 82) உமாபதி சிவாசாரியாரும் இதனை (சுத்தமாஞ் சத்திஞானச் சுடராகும்' (சிவப்பிரகாசம், 75) எனக் கூறுவர்.தடையிலா ஞானம் என்பதற்கு 'மறைப்பில்லாத அறிதற் தொழிலைப் பண்ணும் அறிவ்' என ஞானப்பிரகாசரும், உயிர்களுக்கு அநுக்கிரமாத்திரங் குறித்துப் பொதுவகையாக அறிந்தும் அறிவித்தும் நிற்பதாகிய ஞானம்' என்று சிவஞான முனிவருங் கூறுவது நோக்கற்பாலதாகும் (திருவிளக்கம், 1971:150)

முதல்வனால் கொள்ளப்படும் வடிவ வேறுபாடுகளெல்லாம். சக்தி வடிவமாகும். அச்சக்தி மரபும் வயிரமுமாகிய இரண்டும் ஒன்றோடொன்று சேர்ந்து பிரிவின்றியிருத்தல் போல சிவத்தோடு சேர்ந்து பிரிவின்றி நிற்கும். இதனை,வரும் வடிவு எல்லாம் சக்தி, சத்திதான் மரமுங்காழ்ப்பும் இருமையும் போல மன்னிச் சிவத்தினோடு இயைந்து நிற்கும்' (சிவஞானசித்தியார், சுபக்கம், 87) என்பர் அருணந்தி சிவாசாரியர், இங்கு மரம் சக்திவடிவத்திற்கும் காழ்ப்பு சிவத்திற்கும் உவமைகளாயின.

சைவ சித்தாந்தத்தில் இறைவனது வடிவங்கள் யாவும் 'சக்தி சரீரம்' என்றும், அவனது செயல்கள், சக்தியின் செயல்கள் என்றும் அழைக்கப்படும். இதன் விளக்கத்தினை அருணை வடிவேலு முதலியார் 'அருளும் அது காரணமாக உண்டாகின்ற உருவம், பெயர் தொழில்களும் அறிவின் காரியமேயாதலாலும், அறிவே 'சக்தி' எனப்படுதலாலும் பதியினது உருவங்கள் யாவும் சக்தி சாரீரமும், செயல்கள் யாவும் சக்தியின் செயல்களுமே யாகும் (1994 :77) எனக் கூறுவது குறிப்பிடற்பாலதாகும்.

சக்தி பேதங்கள்

சிவ பேதங்கள் ஒன்பது போன்று சக்திபேதமும் ஒன்பது வகைப்படும். பராசக்தி ஒருத்தியே ஒன்பது பேதங்களாகத் தோன்றுகின்றாள். என்பது சைவசித்தாந்தக் கருத்தாகும். முதல்வன் எத்திறமாகிய நிற்பானோ பராசக்தியும் அத்திறதஶ்ரீமாகவே நிற்பாள். முதல்வன் அருவத்தின் சிவமாய் இருக்கும்பொழுது அவளும் அருவத்தின் சக்தியாய் இருப்பாள். அவன் அருவுருவத்தில் நாதமாய் இருக்கும் பொழுது அவள் அருவத்தில் விந்து சக்தியாய் விளங்குவாள். அவன் அருவுருவத்தில் சதாசிவமாய் இருக்கும் பொழுது அவள் அருவுருவத்தில் மனோன்மணியாவாள. இவ்வாறே அருவத்தில் மகேசனுக்கு மகேசையாகவும் உருத்திரனுக்கு உமையாகவும், திருமாலுக்கு இலக்குமியாகவும். இக்கருத்துக்களையே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சத்தியாய் விந்து சத்தியாய், மனோன்மணி, தானாகி,

ஒத்தறும் மகேசை ஆகி, உமை. திரு, வாணி ஆகி

வைத்துறம் சிவாதிக்கு இங்ஙன் வரும்சக்தி ஒருத்தியாகும்.

எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பாள்'

(சிவஞானசித்தியார், சுபக்கம், 165) என அருணந்தி சிவாசாரியர் கூறுகிறார்.

ஓட்டுமொத்தமாக நோக்கும் போது சைவ சித்தாந்தத்தில் சக்தி தத்துவம் பற்றிப் பின்வரும் முடிவுகளை குறிப்பிடலாம். சக்தி தத்துவம் சைவசித்தாந்தத்தில் மிகவும் முக்கியத்துவமும் சிறப்பும் பெற்று விளங்குகின்றது. சைவசித்தாந்தத்தில் சக்தி தத்துவம் பற்றிய அறிவுக்கு சித்தாந்த சாத்திரங்கள் முக்கிய மூலமாக விளங்குகின்றன. சத்தியைச் 'சக்தி' என வழங்குதல் இன்றைய மரபாகவுள்ளது. சைவ சித்தாந்திகள் சக்தியைத் திருவருள், திருவடி, சிவஞானம், ஆணை, சிற்சக்தி, சிவசக்தி, பராசக்தி ஆகிய சொற்களாலும் குறிப்படுவர். சிவமும், சக்தியும் இருவேறு முதல்களல்ல. முதல்வன் சக்தியைக் கொண்டே ஐந்தொழில் புரிகின்றார். முத்திநிலையிலும் அருட்சக்தி உயிருக்கு உதவும் சிறப்புடையது.

சைவசித்தாந்தம் 'மறைப்புச்சக்தி' எனப்படும். 'திரோதானசக்தி' யைச் சிறப்பாக குறிப்பிடுகின்றது. சைவசித்தாந்தத்தில் 'மாயை' என்பது இறைவனுக்கு ஒரு சக்தி போன்றது. இது 'பரிக்கிரகசக்தி எனப்படும். சைசித்தாந்தத்துள் சிவமும் சக்தியும் 'தாதான்மிய சம்பந்தம்' குணகுணிபாவம்' என்ற நிலைகளில் நீக்கமின்றி நிற்பர். சைவசித்தாந்தத்தில் முதல்வன் ஒருவனே சிவமும் சக்தியும் சக்தியும் என இருதிறப்பட்டு நிற்றலை 'அம்மைஅப்பன்' வடிவங்களும், அர்த்தநாரீஸ்வரர் வடிவமும் குறித்து நிற்கின்றன. சிவன் என்றும் சிற்சக்தியுடன் பிரிவின்றி நிற்கும் இயல்பினன். முதல்வனுடைய உருவங்கள் 'சக்தி சரீரம்' என்று அவரது செயல்கள் சக்தியின் செயல்கள் என்றும் கூறப்பெறும். முதல்வனது உருவத்திருமேனி சக்தி வடிவமாகும். முதல்வன் தன்னுடைய சொரூபநிலையிலிருந்து தோற்றநிலை எய்து கையில் சக்தியிடமாகவே தோன்றுவார். சிவனது தொன்மைக் கோலம் சக்தியுடன் விளங்குவது சித்தாந்தத்தின் சிறப்பாகும்.


சிவலிங்கத் திருமேனியும் முதல்வன் சக்தியும் சிவமுமாய் விளங்குவதையே சுட்டி நிற்கின்றது. முதல்வன் அருள் வடிவினராக விளங்கும் போது ஆன்மாக்களுக்குக் கருணை செய்யும் போது தனது அருட்சக்தியுடன் சேர்ந்தே அருள் புரிகின்றார். ஏன்பது சைவசமயத்தின் சிறப்பம்சமாகும். சைவசித்தாந்திகள் சிவமும் சக்தியும் ஒன்றே என்று கூறினும் வெளிப்படும் போது இறைவனே சக்தி என்றும், உள்ளடங்கியிருக்கும் போது 'சிவம் என்றும் வழங்குவர். சிவன் எத்தொழிலையும் சக்தியைக் கொண்டே செய்வான்.

உலகமாகிய காரியத்திற்கு சக்தி துணைக் காரணமாகும். 'சக்தி ஒனன்றேயாம்.அது தொழில் வேறுபாட்டால் பலவாகும்' என்பது சித்தாந்த நிலைப்படாகும். அறிவே சக்தியின் வடிவமாகும். சிவபோதங்கள் ஒன்பதிற்கும் ஏற்றவாறு சக்தி போதமும் ஒன்பது வகைப்படும். இவ்வாறாக சைவசித்தாந்தத்தில் இயக்கு சக்தி. இயக்கச் சக்தி, வாழ்வியில் என்ற எல்லாவற்றிற்கும் சக்தி தத்துவமே அடிப்படையாக விளங்குகின்றதெனலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான
# மகோற்சவ நிகழ்வுகள் 2020






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான
# மகோற்சவ நிகழ்வுகள் 2020











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறம் வளர்த்த நாயகியாக விளங்கும் தெல்லிநகர் துர்க்கையம்பாள்

பா. துவாரகன். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

இந்துசமயமும் தமிழர்களின் வரலாறும் சிந்துவெளி நாகரிகத்துடன் தொடர்புபட்டவை என்று வரலாற்றாசிரியர்களால் நிறுவப்பட்டுள்ளன. ஆதியும் அந்தமும் இல்லா இறைவன் போன்று இந்துமதமும் இயற்கைவழிபாடும் அனாதியானவை. உலகில் தோன்றிய சமயங்களும் இனக்குழுமங்களும் தங்களது கோட்பாடுகளையும் அறங்களையும் காலாத்துக்குக்காலம் மாறிவரும் பண்பாடுசார் மரபுகளையும் வரலாறாக பல்வேறு வடிங்களில் பதிவுசெய்து மனித சமுதாயத்திற்கு விட்டுச் சென்றுள்ளன.

நிறுவனமயப்பட்ட நன்கு கட்டமைக்கப்பட்ட சமயம்சார் மனிதசமூக அல்லத இனக்குழுமமே இன்று தேசங்களை, உலகினை ஆள்கின்றனஞ வழிநடத்துகின்றன.

மாறிவரும் உலக ஒழுங்கில் இன்று மிடுக்கு அலைபேசி உலகினை உள்ளங்கையில் வைத்துள்ளது. இந்துசமயம் மற்றும் அதன் கலைமரபுகள் குறித்து சாதரணமாக அதைப் பின்பற்றுபவர்களே வெறும் பௌதிக நிலைநின்று கேள்வி கேட்கின்றனர். விடையை அறிவதற்கு ஓர் அறிவு வேண்டும் என்று அறிகிலர்.

இராசராசசோழன் கட்டிய தஞ்சைப் பெருங்கோயில் தமிழர்களது கலைமரபின் இந்துப்பண்பாட்டின் ஓர் அடையாளம். 1000 வருடங்கடந்தும் தமிழினத்தின் கலைமரபையும் பண்பாட்டை உலகிற்குச் சொல்கின்றது. இலட்சம் நாமங்கள் கொண்டு இறைவன் அர்ச்சிக்கப்டுவது போல ஓர் உயர்ந்த கலைப்படைப்புக்கும் கோபுரத்தில் உள்ள சிற்பங்களுக்கும் ஆயிரம் வியாக்கினாங்கள் இரசனைக்குரியவர்களால் அளிக்கப்படும்.

ஒருவர் யாழ்ப்பாணத்தில் இரண்டு ஆலயங்களை கூறுமாறு கேட்டால் நல்லைநகர்க் கந்தனையும் தெல்லிநகர் துர்க்கை அம்பாளையும் கூறுவேன். சான்றோர் இதனையே அறியத் தந்தனர். இன்னும் சில ஆலயங்கள் கூறத்தக்க இம்மரபுக்குள் வரும். எனினும் இவ்விரு ஆலயங்களும் தமக்கான தனித்துமான நீண்ட நன்மரபையும் பண்பாட்டையும் பேணுபவை. நல்லூர்க் கந்தனுக்கு 500 வருடங்களுக்கு மேலான தனித்துமான தமிழ் அரச மரபு இன்றும் பேணப்படுகின்றது. நல்லூரிலே நேரந்தவறாத இராச உபசாரம் நடக்கின்றது. இது ஒரு அறம். நல்லூரானுக்கு உரிய காணிக்கை யாவும் நல்லூர் கந்தனுக்கு என்பது ஓர் மரபோடு இணைந்த அறம். "தன்னந்தனிநின் றதுதான் அறிய இன்னம் ஒருவர்க் கிசைவிப்பதுவோ".

தெல்லிநகர் துர்க்கை அம்பாளை உலகறியச் செய்து துர்க்கையம்பாளுக்கு தனிமரபை ஏற்படுத்தி ஆலயத்தை அறப்பணிகளுக்கு வழிகாட்டிவர் அமரர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையார் ஆரம்பித்த அறப்பணியை இன்று துர்க்கையம்பாள் கலாநிதி ஆறு திருமுருகன் ஐயா அவர்களைக் கொண்டு பரந்துபட்டுச் செய்விக்கின்றாள்.

திருவுத்தரகோசமங்கையில் இருக்கும் அம்பிகைக்கு அறம் வளர்த்த நாயகி என்று ஒருபெயர் உண்டு. 32 வகை அறங்களையும் செய்ய விரும்பி அம்பாள் பூவுலக்கு வந்து அறம் வளர்த்து திருவுத்தரகோசமங்கையிலே அறம் வளர்த்த நாயகியாக வீற்றிருக்கின்றாள். நான்கு வாயில்களிலும் கோபுரத்துடன் விளங்கும் தெல்லிநகர்த் துர்க்கையம்பாள் மேலும் தலைவாசல் கோபுரத்தையும் கண்டு ஈழத்தில் அறம் வளர்த்த நாயகி என்று போற்றப்படுவாள்.

'*பின்னே திரிந்து நின்யடியாரைப் பேணிப் பிறப்பறுக்க வழிகாட்டிய தெல்லிநகர்த் துர்க்கையம்பாள் தமியேனையும் தன்பக்தருக்குள் ஒருவனாக ஆண்டு கொண்ட நேசத்தை*' யான் என்சொல்வேன்.

## திருமூலர்

ஒரு இடத்தில் இடையன் ஒருவன் இறந்து கிடக்க அவன் மேய்த்து வந்த பசுக்கள் கத்திக்கொண்டிருந்தன. அங்கு வந்தவர் இந்த நிகழ்வைக் கண்டு மனம் வருந்தினார். பசுக்களின் துன்பத்தைப் போக்க இந்த இடையனை உயிர்ப்பிக்க எண்ணித் தனது உடலில் இருந்து வெளியேறி (தனதுடலை ஒரு மறைவான இடத்தில் விட்டு) மூலன் என்ற இந்த இடையனின் உடலில் புகுந்தார். மூலன் எழுந்ததும் பசுக்கள் வீடு நோக்கிச் செல்ல இவரும் பின்னால் சென்றார்.

வீட்டைச் சென்றடைந்ததும் அவன் மனைவி வரவேற்று அவர் உடலைத் தீண்ட வந்த போது இவர் தான் ஒரு முனிவர், கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தை தெரிந்ததால் இறந்து கிடந்த உனது கணவர் உடலில் புகுந்து உனது பசுக்களை இங்கு கொண்டு வந்தேன். உண்மை இதுதான், நான் உன் கணவனல்ல என்றதும் அவளால் நம்பமுடியவில்லை. ஊராரைக் கூப்பிட்டு உள்ளதைச் சொல்லி ஒரு இடத்தில் விட்டுவந்த தன் உடலைத் தேடிப்போயப் பார்த்தபோது அந்த உடலை யாரோ எரித்துவிட்டார்கள்.


இவர் இந்த உடலிலேயே இருந்து மூவாயிரம் வருடங்கள் தியானம் செய்து வருடத்திற்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல்கள் பாடினார். இதுவே திருமந்திரம். இடையன் பெயர் மூலன். அவன் உடலில் இருந்ததால் திருமூலன் எனப் பெயர் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமகள் அழுத்தகம், புத்தகசாலை

# திறப்பு விழா திங்கட்கிழமை 14.09.2020







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இராமகிருஸ்ண மிசனின் பணிகள்

இ புவிராஜ், (ஆசிரியர்)

இலங்கையில் சமூகசேவை நிறுவனங்களில் முதன்மையும் முக்கியம் வாய்ந்ததுமான நிலையமாக இராமகிருஸ்ணமிசன் திகழ்கின்றது. இது பற்றி விவோகனந்தர் குறிப்பிடும் போது 'இது இராமகிருஸ்ணருடைய உடலாகும் யாரெல்லாம் இதனை போற்றுகின்றார்கள் அவர்கள் எல்லாம் இராமகிருஸ்ணரை போற்றுகின்றார்கள் யாரெல்லம் துாற்றுகின்றார்களோ அவர்கள் எல்லாம் இராமகிருஸ்ணரை தூற்றுகின்றார்கள்' எனும் வீரம் மிக்க வரிகளுடன் உருப்பெற்றது எனலாம். இதனால் ஆன்மிக, மருத்துவ, கலை, கலாசார போன்ற பல்வேறு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றது. 1897 மே முதலாம் திகதி சுவாமி விவேகானந்தர் இந் நிறுவனத்தை உருவாக்கினார். சுவாமி சர்வானந்தர் தூய அன்னை சாரதாமணிதேவி அவர்களிடம் தீட்சை பெற்று 1905 இராமகிருஸ்ணமிசனில் சேர்ந்தார். பின்னர் 1911 சென்னை இராமகிருஸ்ணமிசனின் தலைவரானார். இவ்வாறு தலைவராக இருந்த காலம் பல தடவை இலங்கைக்கும் விஜயம் மேற்கொண்டார். முதல் தடவையாக 1915ல் வருகை தந்தார். இதனை தொடர்ந்து கீரிமலையில் நடைபெற்ற முதல் இந்து மாணவர் முகாம் வெற்றிகரமாக நடைபெற்றது. இதில் சுவாமி கலந்து கொண்டு சிறப்பித்தார். இவ் விழாவிற்கு அடிக்கடி சர்வானந்தர் அழைக்கப்பட்டார். 1915, 1917, 1918, 1919, 1921, 1926, 1930, 1932 ஆகிய ஆண்டுகளில் வந்தார்.

கொழும்பு வெள்ளவத்தையில் 1935ம் ஆண்டு இராமகிருஸ்ணர் பிறந்த நூற்றாண்டில் 44ம் இலக்க வீதியில் தற்போதைய இராமகிருஸ்ணமிசன் உருவாக்கப்பட்டது. இதில் ஆலயம், பிரார்தனை மண்டபம், பொது நிகழ்ச்சி மண்டபம், அலுவலகம், வதிவிடம் என்பவற்றுடன் நூல் நிலையமும் திறக்கப்பட்டது. இங்கே ஏறக்குறைய 6000 புத்தகங்கள் காணப்படுகின்றது.

சமயம், தத்துவம் இராமகிருஷ்னர்- விவேகானந்தர் வேதாந்த இலக்கியங்கள் புராண இதிகாசத்தை உள்ளடக்கியதாகவும் நூல் நிலையம் காணப்படுகிறது. இங்கு 16 சஞ்சிகையும் தினசரி செய்தித்தாள்களும் உள்ளன. இப்பகுதி மக்கள் இந்நூல்நிலையத்தை சிறப்பாக பயன்படுத்துகின்றனர்.

1959ல் கலாசார நிலையம், விடுதி அமைப்பதற்கான திட்டம் முன்னெடுக்கப்பட்டது. குடியரசுத்தலைவர் ஸ்ரீ இராஜேந்திரபிரசாத் அவர்களால் அதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இம் மண்டபம் பண்டித் ஜவகர்லாநேருவால் திறந்து வைக்கப்பட்டது. இங்கு கலை, கருத்தரங்கு, கலாசாரம், சமயம் தொடர்பான விடயங்கள் நடைபெறுகின்றது. இந்தியாவில் இருந்தும் உள்ளூரில் இருந்தும் வரும் அன்பர்களிற்கு மிக குறைந்த கட்டணத்தில் தங்குமிடம் வழங்கப்படுகின்றது.

1952ல் இராமகிருஷ்ண ஜெயந்தி அன்று ஞாயிற்றுக் கிழமைப் பாடசாலையானது ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையிலே தொடர்ந்து இயங்கும் பழமையான ஞாயிறு சமய பாடசாலைகளில் இதுவும் ஒன்றாகும் தற்போது ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் இங்கு கல்வி கற்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது கொழும்பு இராமகிருஸ்ண மிஷனது சமய சமரசத்தை ஏற்படுத்தும் ஓர் அமைப்பாக உள்ளது. இங்கு இந்து, பௌத்தம், இஸ்லாம் மாணவர்கள் வருகை தருவதுடன் விழாக்களின் போது தத்தமது சமய சிந்தனை போதனைகளை வெளிப்படுத்துவதனை தற்காலத்திலும் கூட காணமுடிகிறது எனலாம். குறிப்பாக இராமகிருஸ்ணர் சாரததேவி, விவேகானந்தர் பிறந்த தினவிழா சிவராத்திரி, நவராத்திரி, கிறிஸ்மஸ் போன்ற பல விழாக்கள் நடாத்தப்படுகின்றது. பாடசாலை மாணவர் தமது மதக் கருத்தை பிரதிபலிக்கும் கலைநிகழ்வுகளை நடாத்துகின்றனர்.

வெளிமாவட்டத்தில் புத்தகக் கண்காட்சி நடாத்தப்படுவதுடன் கருத்தரங்கு, அந்தர்யோகம், செற்பொழிவு, போன்றன நடைபெறுகின்றது. இதனை விட பொது மக்களுக்கு மருத்துவ உதவி, ஏழைமாணவர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பண உதவி என்பனவும் வழங்கப்படுகின்றது.

மட்டக்களப்பு பிரதேசத்திலும் இராமகிருஸ்ணமிசன் உன்னத பணியை ஆற்றுகின்றது ஆரையம்பதி, உப்புமேடை, நாவலடி, காரைதீவு மற்றும் மட்டக்களப்பு நகரம் ஆகிய பகுதியிலும் இதன் பணி மேற்கொள்ளப்படுகின்றது. கல்வித்துறை பொறுத்து மட்டக்களப்பில் சுவாமி விவேகானந்தர் மூலம் ஐந்து பாடசாலைகள் இராமகிருஸ்ண மிஷனிடம் கையளிக்கப்பட்டு அப் பாடசாலைகள் மூலம் கல்விப்பணி முன்னெடுக்கப்படுகிறது நான் உட்பட எனது முதலாவது அரச பதவியை மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் முன்னெடுத்தேன்.

ஆணுக்கு நிகராக பெண் கல்வி அவசியம் என்பதை உணர்ந்த விவேகானந்தர் பெண்கள் பாடசாலைகளை அமைத்தார். அந்த வகையில் காரைதீவு சாரதா வித்தியாலயம், ஆரையம்பதி விவேகானந்தா மகளிர் வித்தியாலயம் என்பன அமைக்கப்பட்டு கல்வித்துறை முன்னேற்றப்பட்டது. இவ்வாறு மிஷன் மேற்கொண்ட பணிக்கு நன்கொடையாக கல்லடி உப்புமேடை தமிழ் பாடசாலை, முறக்கொட்டாஞ்சேனை தமிழ் பாடசாலை என்பன வழங்கப்பட்டது. இதனை விட சூறாவளி, வெள்ளப்பெருக்கு, நிலநடுக்கம் போன்ற இயற்கை அனர்த்தங்களுக்கும் நிவாரணப்பணி இராமகிஷ்ண மிஷனால் முன்னெடுக்கப்படுகின்றது. இவ்வாறாக இராமகிஷ்ண மிஷன் இலங்கையில் உன்னத பணிகளை ஆற்றுகின்றது என்றால் மிகையாகாது.

**அபிராமி அந்தாதி**

கண்ணியது உன்புகழ் கற்பதுஉன்நாமம் கசிந்துபக்தி
பண்ணியது உன்இருபாதாம் புயத்தில் பகல்இரவா
நண்ணியது உன்னைநயந்தோர் அவையத்து நான்முன்செய்த
புண்ணியம்ஏது? என்அம்மே! புவிஏழையும் பூத்தவளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வருட மகோற்சவத் திருவிழா நிகழ்வுகள்














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், அன்னாகம்.